
# சுடர் ஒளி

வாரந்த சஞ்சிகை

பெப்ரவரி 19 - 25, 2014 பக்கம் - 24 30/-

# ஒளிகளில் வாழுபவன்





மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'திறந்த' மனது

சரவதேசப் போட்டிகளில் வெற்றி பெற்றுவிட்டால் தங்கள் மகிழ்வை ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்ள ஒவ்வொரு வீரரும் வித விதமான காரியங்களில்ஈடுபடுவார்கள். பொது வாகவே தங்கள் மேலங்கிகளைக் கழற்றி, ஒரு சுற்றுச் சுற்றி பின்னர் அதனைப் பார்வையாளர் பகுதி நோக்கி வீசி எறிவதை பல வீரர்கள் தங்கள் மகிழ்வின் வெளிப்பாடாகச் செய்து வருகிறார்கள்.

ரஷ்யாவில் நடைபெற்று வரும் 22 ஆவது குளிர்கால ஒலிம்பிக்கில் 3000 மீற்றர் அதிவேக பனிச்சறுக்கு விளையாட்டில் ரஷ்யவீராங்கனை ஒல்கா கிராஃப் வெண்கலம் வென் றார். வழக்கம் போல அவரும் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள மேலாடையைக் கழற்றி பார்வையாளர்களை நோக்கி வீச நினைத்தார். அவர் மேலாடையின் 'ஸிப்பை' இழுக்க, பார்வையாளர் பகுதி அப்படியே உறைந்து போனது. சட்டென சுதாகரித்துக் கொண்ட ஒல்கா, குனிந்து பார்த்தார். அப்போது தான் தான் உள்ளாடை எதுவும் அணியாத விடயம் நினைவுக்கு வந்தது. உடனேயே 'ஸிப்பை' மேலே இழுத்து மூடிவிட்டார். பாவம், பார்வையாளர்கள் ஒல்காவின் மார் பழகை மட்டுமே கண்டு மனங்குளிர முடிந்தது. இப்போது ஒல்காவின் இந்த உள்ளாடை அணியாத அந் தக்காட்சி 'யூரியூப்பில்' வெளியாகி பல லட்சம் பார்வையாளர்களைச் சென்றடைந்திருக்கிறது. இனியா வது எல்லாம் போட்டுக் கொண்டு வாங்க ஒல்கா.



## இறக்கமும் ஏற்றமும்

இங்கிலாந்தின் கெவின் பீற்றர்சன் ஒரே நேரத்தில் இருவித உணர்வுகளுக்குள் ஆட்படவேண்டிய நிலையைக் காலம் உண்டாக்கிவிட்டது. ஆஸ்திரேலியாவில் இங்கிலாந்து வாங்கிய அடிக்கு பீற் றர்சன் பலிக்கடாவாக்கப்பட்டு அணி யில் இருந்தே தூக்கி எறியப்பட்டு விட் டார். ஆனால் இதற்கு முன்னாள் வீரர் களும், கிரிக்கெட் விமர் சகர்களும் கடும் கண்டனங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் அண்மையில் நடை பெற்ற ஐ.பி.எல் தொடர் ஏலத்தில் 9 கோடி ரூபாவுக்கு டில்லி அணியால் கெவின் பீற் றர்சன் விலைகொடுத்து வாங்கப்பட்டார். இதன் மூலம் இந்தமுறை அதிக விலை போன வெளிநாட்டு வீரராக பீற்றர்சன் இடம்பிடித்துக் கொண்டார். கடவுள் ஒருபக்கம் கதவை அடைத்தால் இன் னொரு கதவைத் திறப்பான் என்று சும்மாவா சொன்னார்கள். இப்போது ஐ.பி.எல்லில் அதிரடி காட்டி இங்கிலாந்து கிரிக்கெட் நிர் வாகத்தின் முகத்தில் கரி யைப் பூச கெவின் முனையவுள்ளார் என்று கூறப்படுகிறது.

## செய் அல்லது செத்து மடி

பங்களாதேஷ்க்கு எதிரான முதலாவது டெஸ்ட் தொடரை வென்ற திமிரோடு களமிறங்கிய இலங்கை அணிக்கு '20/20' போட்டிகளில் நல்ல பாடத்தை பங்களாதேஷ் படிப்பித்திருக்கிறது. அந்த அணிக்கு எதிரான '20/20' தொடரை இலங்கை அணி 2:0 என்ற கணக்கில் வென்றிருந்த போதும், குறித்த இரு போட்டிகளிலும் மயி ரிழையிலேயே பங்களாதேஷ் வெற்றியை இழந்திருந்தது.

இறுதி வரை வெற்றிக்காகப் போராடும் இந்தக் குணம் முன்னர் இலங்கை அணியி டமே இருந்தது. அதனால் தான் 1996 இல் உலகக்கிண்ணத்தையும் வெல்ல முடிந்தது. ஆனால் இப்போது உள்வீட்டு அரசியலா லும், தன்னம்பிக்கையின்மையாலும் பெரிய அணிகளிடம் தொடர்ச்சியாக இலங்கை அடிவாங்கி வருகின்றது. ஆனால் மிகச் சாதாரண அணியாக இருந்த போதும் ,எந்தப்பெரிய அணியாக இருந்தாலும் நெருக்கடியைக் கொடுத்து, 'செய் அல்லது செத்துமடி' என்ற ஓர்மத்தோடு தோற்றாலும் கௌரவமாகத் தோற்கவே பங்களாதேஷ் நினைக்கிறது. இந்தப் போராட்டத்தின் போது எதிரணி சற்று கண்ணயர்ந்தாலும் வெற்றி பங்களாதேஷ் பக்கம் வந்துவிடும். இரண்டு '20/20' போட்டிகளிலும் இலங்கை இன் னும் சில தவறுகளை விட்டிருந்தால் பங்க ளாதேஷ் பந்தாடியிருக்கும். பங்களாதேஷ் இன்னும் சில வருடங்களில் இலங்கை அணியை விடவும் பலமிக்க அணியாக உருவாவதற்கான அறிகுறிகள் '20/20' தொடரிலும், இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் தொடரிலும் தென்படத் தொடங்கியுள்ளன.





# ஏன் வாங்கவில்லை?

இந்தமுறை ஐ.பி.எல் போட்டி கள் தொடங்க முன்னரே இலங்கை பெரும் அவமானத்தைச் சந்தித் திருக்கிறது. ஒவ்வொரு அணி யும் தனக்குத் தேவையான வீரர்களை பெருந்தொகைப் பணம் கொடுத்து ஏலத்தில் எடுப்பது ஐ.பி. எல் மரபு. இந்தமுறையும் அந்த மரபுக்கேற்ப நடைபெற்ற வீரர்களுக்கான ஏலத்தில், இலங்கை அணியின் முன்னணி வீரர்க ளான டில்ஷான், மஹேல ஆகியோர் உட் பட இலங்கை வீரர்களை எவரும் கணக் கிலேயே எடுக்கவில்லை.


இதற்குப் பல காரணங்கள் இருக் கின்றன. அதில் மிக முக்கியமானது, கடந்தமுறை ஐ.பி.எல் தொடரில் இலங்கை வீரர்களில் திஸரபெரேரா வைத் தவிர மற்றவர்கள் எவரும் பெரிதா- கச்சோபிக்கவில்லை. ஹைதாரபாத், புனே, டில்லி அணிகளுக்கு முறையே சங்க கார, மத்தியூஸ், மஹேல ஆகியோர் அணித் தலைவர்களாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் சொதப்பியதால் மாற்றுவீரர்களிடம் அந்தப்பதவியை அவர்கள் பறிகொடுக்க வேண்டியிருந்தது. பலபோட்டிகளில் இவர்கள் அணித்தலைவராக இருந்தும் விளையாட நிர்வாகம் இடம் கொடுக்கவில்லை. இதனால் தான் இலங்கை வீரர்களை ஏலத்தில் எடுக்க எவரும் ஆர்வம் காட்டவில்லையாம். விளை யாட்டு உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக் காமல் தனியே பணத்தை மட்டும் நோக் காகக் கொண்ட ஐ.பி.எல் தொடர்களில் பங்கேற்றால் இப்படித்தான் மூக்குடைபட வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆவா' + 'டிலு' அவிழாத முடிச்சுகள்

கொள்ளை, வாள்வெட்டு போன்ற செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் 9 பேர் கொண்ட குழு ஒன்று பொலிஸாரால் பிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்கு 'டிலு'' என்ற ஒரு பெயரும் உண்டாம்.

சிலவாரங்களுக்கு முன்பு ஆவா' என்ற குழுவைச் சேர்ந்த 11 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களும் வாள்வெட்டு வீரர்கள் தான். பட்டப்பகலில் மனிதர்களை, பகிரங்கமானஇடங்களில் வைத்து வெட்டிவிட்டு மாயமாக மறைந்துவிடுவார்கள். கொள்ளையடிக்கும் சந்தர்ப்பங்களில் எவராவது குறுக்கிட்டால் உடனே வாள் வெட்டுத்தான். பயத்தில் பொதுமக்கள் பொலிஸில் கூட முறையிடுவதில்லையாம்.




ஆவா குழுவினர் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு சிலர் பிணையிலும் விடப்பட்டுவிட்டனர்.

ஆவா குழுவின் சூடு ஆறுவதற்கிடையில் புதிதாக 'டிலு' குழு பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவர்களிடமிருந்து வாள் ,கத்தி, பொல்லு என்பவற்றுடன் இராணுவச் சீருடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவச் சீருடை எப்படி இந்தக் குழுவிடம் வந்தது? இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்களா? அல்லது இவர்கள் இராணுவத்தால் இயக்கப்பட்டவர்களா என்ற கேள்வி மக்களிடையே இப்போது எழுந்துள்ளது.

**இராணுவச் சீருடை எப்படி இந் தக் குழுவிடம் வந்தது? இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்களா?**

'டிலு' குழுவினர் தங்கள் பயங்கர நடவடிக்கைகளுக்கு தாங்களே இராணுவச்சீருடை போல் தயாரித்தும் பயன்படுத்தி இருக்கலாம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் சங்கானையில்தான் முதல் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் உயிரிழந்தார் பூசகர் ஒருவர். சங்கானைப் பூசகர் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இராணுவக் கோப்ரல். இந்தச் சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற தொடர் கொலைகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தொடர்பிருந்தாகக் கருதப்பட்டது.

இதே போன்று கிளிநொச்சி, வலி.வடக்கு போன்ற பகுதிகளில் பொதுமக்கள் நடத்திய போராட்டங்களை சீருடை அணியாத இனந்தெரியாதோர் உட்புகுந்து குழப்பினர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கூட்டங்களின்போதும் இவர்கள் புகுந்து குழப்பங்களை விளைவித்தனர். கழிவு ஒயில் அபிஷேகங்களிலும் படைப்புலனாய்வுப் பிரிவுக்கு தொடர்புஉண்டு என நம்பப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் இப்படியான சட்டவிரோத நடவடிக்கைகளில் இறங்கியவர்கள் இராணுவப் புலனாய்வாளர்களே என்பது கையும் மெய்யுமாக கண்டுணரப்பட்டது.

கிறீஸ் பூதங்கள் இராணுவ முகாம்களுக்குள் ஓடித்தப்பியமையும் அவர்களைப் பிடிக்க முயன்ற மக்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்களையும் அவ்வளவு எளிதில் நாம் மறந்துவிடமுடியாது.

அதே வேளையில் தற்போது பிடிபட்டுள்ள 'டிலு' குழுவில் உள்ளவர்களின் நால்வர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள். அதில் ஒருவர் முன்னாள் விமானப்படை வீரர்.

இப்படியான நிலையில் 'ஆவா', 'டிலு' குழுக்கள் இராணுவத்தின் அனுசரணையுடன் செயற்பட்டனவா என்ற சந்தேகம் எழுகின்றது.

அப்படி இல்லையென்றால் இராணுவம் செய்த சட்ட விரோத நடவடிக்கைகளை இவர்கள் தலையில் சுமத்த திட்டமிட்டே இவர்களிடம் இராணுவச்சீருடை மீட்கப்பட்டத்தாக கூறப்படுகிறதா?

எப்படியிருப்பினும் இராணுவப் பின்னணி இல்லாமல் இதுபோன்ற சட்டவிரோதக் குழுக்கள் இயங்க முடியாது என்பதே பொது மக்களின் நம்பிக்கை.

தொடர் கொலைகள், கிறீஸ்பூதக் குழப்பங்கள் போன்றவற்றை ஏற்படுத்த 'ஆவா', 'டிலு' குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம். இப்போது அவற்றை மறைக்க தாமே அந்தக் குழுக்களைக் கண்டுபிடித்து மக்களைக் காப்பாற்றுவது போன்று படைத்தரப்பு நடிக்கிறதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் மக்கள் சகலவற்றையும் புரிந்து வைத்துள்ளார்கள் என்பதை இவர்கள் புரிவதில்லை. அது தான் பெரும் பரிதாபம்.

# பண்ணையாரும் பத்மினியும்

திரை விமர்சனம்

ஏற்கனவே குறும்படமாக வெளிவந்து பலரின் பாராட்டுதல்களையும் பெற்ற படைப்பு இப்போது 'பண்ணையாரும் பத்மினியும்' என்ற பெயரில் முழுநீளப் படமாக வெளிவந்திருக்கிறது.

அருண்குமார் என்ற புதியவரின் இயக்கத்தில் விஜய்சேதுபதி, ஜெயப்பிரகாஷ், ஐஸ்வர்யா ராஜேஸ், நீலிமாராணி, பாலசரவணன் உள்ளிட்ட பலரின் நடிப்பில் இந்தப் படைப்பு உருவாகி இருக்கிறது.

ஊர்ப்பண்ணையாரான ஜெயப்பிரகாஷின் நண்பர் ஒருவர் வெளிநாட்டுக்குச் செல்ல முடிவெடுக்கிறார். அதன்போது தான் வைத்திருந்த காரை பண்ணையாரிடம் கொடுத்துவிட்டுப் போகிறார். அதன் பின்னர் பண்ணையாரின் செல்லப் பிள்ளையாக மாறும் காருக்குப் பத்மினி என்றும் பெயர் சூட்டுகிறார்கள். பத்மினியின் சாரதியாக வருகிறார் விஜய்சேதுபதி. தனது மனைவியை பத்மினியில் ஒருநாளைக்கு ஏற்றிச் செல்ல வேண்டும் என்பது பண்ணையாரின் கனவு. அதற்காக விஜய் சேதுபதியிடம் காரோட்டக் கற்றுக்கொள்ள முனைகிறார். ஆனால் காரோட்டப் பழகிவிட்டால் பண்ணையார் தன்னைக் கழற்றிவிட்டுவிடுவாரோ என்ற பயத்தில் பின்னடிக்கிறார் விஜய் சேதுபதி. இந்த நிலையில் பண்ணையார் காரோட்டக் கற்றுக்கொண்டாரா? விஜய்சேதுபதி பத்மினியைப் பிரிந்தாரா? என்பதைச் சொல்கிறது 'பண்ணையாரும் பத்மினியும்' திரைப்படம்.

குறும்படமாக சில நிமிடங்களில் சொல்லப்பட்ட கதையை அதே சுவாரஸ்யத்தோடு முழுநீளப்படமாகவும் தந்து வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறார் அருண் குமார்.

வழக்கம் போலவே விஜய்சேதுபதியும், ஜெயப்பிரகாஷும் நடிப்பில் பின்னியிருக்கிறார்கள். அதிலும் இருவரும் காதல் காட்சிகளில் கைதட்டல் பெறுகிறார்கள்.

" எங்க ஊருவண்டி", "எனக்காகப் பிறந்தாயோ" பாடல்களிலும் பின்னணி இசையிலும் மனதைக் கவர்கிறார் இசையமைப்பாளர் ஜஸ்ரின் பிரபாகரன்.

வழக்கம் போல பாடல்களுக்கு மட்டும் வந்து போதாமல் கதையிலும் நடிப்பிலும் முக்கியம் பெறுகிறார் நாயகி ஐஸ்வர்யா ராஜேஷ். வில்லத்தனமான பாத்திரத்தில் தோன்றினாலும் ரசிகர்கள் மனதில் இடம் பிடிக்கிறார் நீலிமாராணி.

குறும்பட இயக்குநர்கள் பலரைப் போன்றே அருண்குமாரும் தன்னுடைய முதலாவது படத்திலேயே முத்திரையைப் பதித்திருக்கிறார்.

ஒரு காரையே படத்தின் நாயகியாக்கி அதனை பார்வையாளர்களையும் ரசிக்கும்படி செய்த இயக்குநர் இன்னும் பல தரமான திரைப்படங்களை தருவார் என நம்பலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனானில் விரைவில் பிரளயம்

— நீலன்

கடந்த பல ஆண்டுகளாக ஒருபுறம் கிறிஸ்தவ - இஸ்லாமிய மதச் சண்டையாலும், ஸுன்னி - ஸியா பிரிவு முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதலாலும் சீரழிந்து கொண்டிருக்கும் லெபனானில் விரைவில் பெரும் இரத்தக் களரி ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. லெபனானுக்கு முரண்பாடுகள் நிறைந்த நீண்ட வரலாறு ஒன்று உள்ளது.

## லெபனான் பிறந்த கதை

லெபனான் என்ற சொல்லின் அர்த்தம் வெண்மை என்பதாகும். வெண்பனி தாங்கிய மலைகள் நிறைந்த இடம் என்பதால் லெபனான் இந்தப் பெயரைப் பெற்றிருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை லெபனானின் மரோனைற் இனக் குழுமத்துக்கும், துரூஸ் இனக் குழுமத்துக்கும் இடையே மத மாற்றப்



போட்டி உக்கிரமடைந்திருந்தது. மலைகளுக்கிடையில் தனித்து வாழ்ந்த மக்களை கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களுக்கு மாற்றும் போட்டி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

சிரியாவின் ஒரு பிரதேசமாகவே ஆரம்பத்தில் லெபனான் இருந்தது. 1920ஆம் ஆண்டு சிரியாவை பிரான்ஸ் ஆக்கிரமித்தது. தொடர்ந்து கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒருதனி நாடாகப் பிரித்தெடுக்கப்பட்டது. பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்கள் தமது அதிகாரத்தை இலகுவாக நிலை நிறுத்தவே இந்தப் பிரிவினையைச் செய்தனர். அப்போது மாரோனைற் கிறிஸ்தவர்கள் 40 சதவீதமாகவும் ஏனைய கிறிஸ்தவர்கள் 11 சதவீதமாகவும் ஸியா முஸ்லிம்கள் 18 சதவீதமாகவும் இருந்தனர்.

## சுதந்திரத்துக்குப் பின்னர்......

1942 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி லெபனான் சுதந்திர நாடாகியது. அதன்போது கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் தேசிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டனர். அவர்கள் தமது நிலப்பரப்பையும் அந்த உடன்படிக்கையின்படி பகிர்ந்து கொண்டு மற்ற அரபு நாடுகள் லெபனானை தம்முடன் இணைக்காமல் இருக்கவும் ஒத்துக் கொண்டனர்.

அந்த உடன்படிக்கையின்படி ஜனாதிபதியாக ஒரு மரோனைற் கிறிஸ்தவரும், பிரதமராக ஒரு ஸுன்னி முஸ்லிமும், நாடாளுமன்ற அவைத் தலைவராக ஸியா முஸ்லிம் ஒருவரும் இருப்பதாக ஒத்துக் கொள்ளப்பட்டது.

## சி.ஐ. ஏ. யின் இரகசியத் தலையீடு

1943ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை மக்களாட்சிப்படி லெபனான் ஆளப்பட்டது. பின்னர் 1957ஆம் ஆண்டு லெபனானில் வலது சாரிக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து ஆட்சி புரியக்கூடிய வகையில் லெபனானிய அரசமைப்பை அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ இரகசியமாகத் தலையிட்டு மாற்றியது. அதற்காக - அரசமைப்பை மாற்றுவதற்காக - 1957 மே, ஜுன் மாதங்களில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வலதுசாரிகளை வெற்றி பெறச் செய்வதற்கு வாக்குப் பெட்டிகளுக்குள் கள்ள வாக்குகள் திணிக்கப்பட்டன. இதனால், அரபு நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கிறிஸ்தவ வேட்பாளர்கள் தோல்வியைத் தழுவினர்.

இந்த முறைகேடான தேர்தலைத் தொடர்ந்து லெபனானில் பெரும் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. மரோனைற் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் மோதிக் கொண்டனர். 1956 ஆம் ஆண்டு எகிப்து சூயெஸ் கால்வாய்க்காக மேற்கு நாடுகளுடன் முரண்பட்டபோது லெபனானிய கிறிஸ்தவர்கள் எகிப்திய ஆட்சியாளரான கமால் அப்துல் நாஸார் பக்கம் நிற்காமல் மேற்கு நாடுகளுக்கு சார்பாக நின்றனர். இது எகிப்துக்கும், லெபனானுக்கும் இடையில் முறுகல் உருவாக்கியது.

1958ஆம் ஆண்டு ஐக்கிய அரபுக் குடியரசு உருவான போது அதில் லெபனானும் இணைய வேண்டும் என இஸ்லாமியர்களும், அதற்கு எதிர்மாறாக லெபனான் தொடர்ந்தும் தனி நாடாக இருக்க வேண்டும் எனக் கிறிஸ்தவர்களும் விரும்பினர்.

ஐக்கிய அரபுக் குடியரசு லெபனானிய இஸ்லாமியர்களுக்கு உதவியது. இதனால் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தது. லெபனானில் அமெரிக்கா தலையிட்டால் தான் அணு குண்டைப் பாவிப்பேன் என சோவியத் அதிபர் குர்ஷேவ் மிரட்டினார். 1958ஆம் ஆண்டு ஜுலை மாதம் அமெரிக்கா 14000 படையினரைக் களமிறக்கி ஒரு படை நடவடிக்கையை லெபனானில் மேற்கொண்டது.

## ஆபத்தான தந்திரம்

காலப்போக்கில் பலஸ்தீன விடுதலை இயக்கம் லெபனானில் வலுமிக்க ஒரு அமைப்பாக உருவானது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் லெபனானைக்கைப்பற்றினால் அது சிரியாவுக்கு ஆபத்தாக முடியும் என சிரிய ஆட்சியாளர்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் நம்ப வைத்தன. இதனால் அப்போதைய சிரிய அதிபர் ஹபீஸ் அல் அஸாத் (தற்போதைய அதிபர் பஷார் அல் அஸாத்தின் தந்தை) 1976 இல் லெபனானுக்கு 40000 படையினரை அனுப்பினர். இதன்போது ஏராளமான பலஸ்தீன விடுதலைப் போராளிகள் கொன்று குவிக்கப்பட்டனர். லெபனானிய துரூஸ் இனக் குழுமத்தின் தலைவர் கமால் ஜம்பிளாட்டும் கொல்லப்பட்டார்.

## ஹிஸ்புல்லாவின் உருவாக்கம்

லெபனானில் பலஸ்தீனவிடுதலை அமைப்பு ஒழித்துக் கட்டப்பட்டதும் எஞ்சிய பலஸ்தீனர்கள் அபுநிதாஸ் என்னும் பெயரில் உள்ள அமைப்பின் கீழ் இயங்கினர். அவர்களையும் 1982 இல் லெபனானுக்குள் ஊடுவிய இஸ்ரேலியப் படைகள் கொன்றன. இந்தநிலையில் லெபனானில் உள்ள பெரும்பான்மை ஸியா முஸ்லிம்கள் மத்தியில் ஹிஸ்புல்லா என்ற அமைப்பு உருவானது. இன்று வரை இஸ்ரேலுக்குப் பெரும் சவாலாக "கடவுளின் படை" என்னும் பொருள் கொண்ட ஹிஸ்புல்லா அமைப்புத் திகழ்கின்றது.

1983 ஆம் ஆண்டு லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் இருந்த அமெரிக்கக் கடற்படையினர் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தற்கொலைத் தாக்குதலை நடத்தி 241 படையினரைக் கொன்றது. இது அமெரிக்கப் படையை பொறுத்த வரை ஒரே நாளில் ஏற்பட்ட பேரிழப்பாகும். இதிலிருந்து ஹிஸ்புல்லா உலகப் புகழ் பெற்றதுடன், அமெரிக்கப்படைகளையும் 1984 இல் லெபனானில் இருந்து வெளியேற்றியது.

## சவூதியின் கபடம்

இஸ்ரேலுக்கு எதிராகப் போராடிவரும் ஸியா முஸ்லிம்களின் அமைப்பான ஹிஸ்புல்லாவுக்கு சிரியாவும் ஈரானும் உற்ற நட்பு நாடுகளாயின. இந்த நிலையில் லெபனானில் உள் ஸுன்னி முஸ்லிம்கள் மத்தியில் அல்கெய்டா அமைப்பு ஊடுருவி, ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக அவர்களைப் போராடத்தூண்டி வருகின்றது. அதேவேளை சிரிய அதிபர் பஸார் அல் அஸாத்துக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இயக்கம் சிரியாவில் களமிறங்கியுள்ளது. எனவே இப்போது மோதல் லெபனானை நோக்கி நகர்கிறது.

கடந்த சில மாதங்களாக ஸியா முஸ்லீம்கள் வாழும் பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராகப் பல குண்டுவெடிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சவூதி அரேபியா, லெபனானியப் படைகளுக்கு மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

சவூதி அரேபியாவின் இந்த நகர்வு பல முனை நோக்கம் கொண்டது. சவூதி மத்தியகிழக்கு விவகாரங்களில் அமெரிக்காவை நம்பியிராமல் தானே காய்களை நகர்த்த வேண்டும் என நம்புகிறது. சிரிய அதிபர் பஷார் அல் அஸாத்தை பதவியிலிருந்து விலக்கத் தடையாக இருக்கும் ஹிஸ்புல்லாவை ஒழித்துக்கட்டுவதன் மூலம் சிரியாவையும் லெபனானையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சவூதி அரேபியா முயல்கின்றது. இப்படி எல்லாத்தரப்புகளும் போர்வெறி கொண்டு லெபனானை நோக்குவதால் அந்த நாட்டில் விரைவில் பெரும் பிரளயம் உருவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமும் அகராதியும்

**ஆசாத்**

உலக மொழிகளில் ஒரு சொல்லுக்குப் பல அர்த்தங்கள் இருப்பதுண்டு. அதேபோன்று ஒருபொருளுக்குப் பல சொற்களும் இருப்பதுண்டு. இந்த வேறுபாடுகள் பிரதேசங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

ஆனால் தமது சொந்தத் தீய நோக்கங்களுக்காக சொற்களையும் சொற்களின் அர்த்தங்களையும் வார்த்தைகளையும் தலைகீழாகப் பாவிப்பவர்களும் இருக்கிறார்கள்.

அந்த வகையில் இலங்கையின் ஜனாதிபதியும், அமைச்சர்களும் ஏனைய அரச தரப்பினரும் அரச ஊடகங்களும் பல வார்த்தைகளின் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் நேரெதிர் அர்த்தங்களில் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

நமது குற்றங்களை மறைக்கத் துணைபுரியும் புதிய அகராதிகளும் அவர்களால் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தலையாட்டும் ஒரு பெரும் கூட்டமும் இங்குண்டு.

ஒரு தேசம் என்பது என்ன? அரசாங்கம்என்பது என்ன? அரசாங்கம் காலத்திற்கு காலம் மாறும். தேசமோ காலம் காலமாக அதேபோன்றே இருக்கும்.

தேசத்தை ஆளும் அரசாங்கம் தேசமாகிவிட முடியாது. ஆனால் இன்று தேசமும் அரசாங்கமும் ஒன்றுதானெனெ மயக்க மூட்டப்படுகிறது. அரசாங்கத்துக்கும், அரச படைகளுக்குமெதிராகக் குற்றம் சுமத்தப்படும் போது அது தேச விரோதச் செயல் எனக் காட்டப்படுகிறது.

போரில் இறுதி நாள்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் என்பன தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரப்படுகிறது. இதில் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், சில இராணுவத் தளபதிகள், நேரடியாகக் குற்றங்களை மேற்கொண்ட படையினர் சிலர் ஆகியோர் மீதே குற்றம் சுமத்தப்படும் வாய்ப்புண்டு.

நாட்டின் முழுமக்களுமோ, முழுப்படையினருமோ இதில் சம்பந்தப்படவில்லை.

சம்பந்தப்பட்ட ஒருசிலரின் மேல் நடத்தப்படும் விசாரணை தேசத்தின் மீதே சுமத்தப்படும் குற்றச்சாட்டாகக் காண்பிக்கப்படுகிறது.

அப்படியானால் இந்தத் தனி நபர்கள் மட்டும் தான் தேசமா? ஏனைய சிங்கள, தமிழ்,முஸ்லிம் பொதுமக்கள் இலங்கை என்ற தேசத்துடன் சம்பந்தப்படாதவர்களா ?

எனவே தேசத்துக்கும் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட நபர்களுக்கும் ஒரே அர்த்தமே வழங்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆட்சியிலுள்ள உயர்அதிகார பீடமும் சில படைத்தளபதிகளும் புரிந்த மனித குல விரோதநடவடிக்கைகளுக்கு முழுத்தேசமும் எப்படிப் பொறுப்பேற்க முடியும்?

ஆனால் தனி நபர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்படும் போது அது தேச விரோதச் செயல் என வர்ணிக்கப்படுகிறது.

இங்கு தான் அரசுக்கும் ,அரச படைகளுக்கும் தேசம் என்ற சொல் ஒன்றாக்கப்பட்டு புதிய அகராதி வகுக்கப்பட்டுள்ளது.

சில நாடுகள் நாட்டில் நிலவும் இனங்களுக்கிடையேயுள்ள நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் வேரறுக்க முயற்சிக்கின்றன என்று அரச தரப்பினர் ஒப்பாரி வைக்கின்றனர்

வடக்கு, கிழக்கு மக்களை இராணுவ ஒடுக்கு முறையின் கீழ் வைத்திருப்பதும், தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளை அபகரிப்பதும், பள்ளி வாசல்கள், இந்துக் கோவில்களை உடைத்து அவர்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தை நிராகரிப்பதும் இன நல்லிணக்கமா?இங்கே இன ஒடுக்குமுறை என்பதே இன நல்லிணக்கம் என இவர்களின் அகராதி அர்த்தப்படுத்தப்படுகிறது. இப்படியாக சமாதானம் அமைதி, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி என்ற வார்த்தைகளின் பின்னால் நடைமுறைகள் எதிராகவே உள்ளன. துப்பாக்கி முனையில் நிலைநாட்டப்படும் கொடூரமான குருதி தோய்ந்த அமைதியே சமாதானம் என அர்த்தப்படுத்தப்படுகிறது.

அர்த்தங்களையே மாற்றும் அகராதிகள் அதிகார பீடங்களால் சிம்மாசனம் ஏற்றப்படுகின்றன. உண்மையின் வலிமை வேகம் குறைந்தது தான். ஆனால் அது உறுதியானது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி.19 – 25, 2014
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# கழன்றுபோன பொய்யின் கவசம்

'போனால் உயிர் வந்தால் பிள்ளை/ கணவன்' என்ற எண்ணம் காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு வந்துவிட்டது. இத்தனை காலமும் அகிம்சை வழியில் போராடிப் பார்த்தாயிற்று. மனுக்கள் மீது மனுக்களாகக் கொடுத்தாயிற்று. வெளிநாட்டுப்பிரதிநிதிகள் ஒருவரையும் தவறவிடாமல் காலில் விழுந்து கெஞ்சியாயிற்று. ஆனால் பலன் பூச்சியம்தான். கால்களும் கண்ணீரும் கரைந்தது தான் மிச்சம். காணாமல் போனவர்கள் வரவேயில்லை.

இந்த நிலையில்தான் அவர்கள் காணாமல் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால் உள்ளதையெல்லாம் அப்படியே கொட்டிவிட முடிவெடுத்திருந்தார்கள். இந்த ஆணைக்குழுவின் முன்பாக உண்மைகளைச் சாயம் பூசாமல் உரைப்பதன் ஊடாக எந்த ஒரு அதிசயமும் நிகழ்ந்துவிடப்போவதில்லை என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

"உவங்கள் ஜெனிவாவில மற்ற நாடுகளைப் பேய்க்காட்டுறதுக்காகத்தான் இப்பிடி ஒரு ஆணைக்குழுவை அமைச்சிருக்கிறாங்கள். கடைசிமட்டும் எங்கட பிள்ளைகளை இவங்கள் மீட்டுத் தரப்போறேல்லை" என்று ஆணைக்குழு நடக்கும் போதே பலர் பகிரங்கமாக முணுமுணுத்தனர். அப்படி எந்த ஒரு விளைவும் கிடைக்கப்போவதில்லை என்று தெரிந்தும் அவர்கள் உண்மைகளை ஒளிவு மறைவின்றி சொன்னமைக்கு ஒரே காரணம், பதிவிடப்படும் இந்த ஆணைக்குழுவின் அறிக்கைகளை சர்வதேச நாடுகள் கூர்ந்து நோக்கி ஏதாவது நல்லது நடக்காதா என்ற நப்பாசைதான்.

முன்னர் எல்லாம் தங்கள் பிள்ளைகளை யார் கடத்தினார்கள் என்ற விடயத்தைத் தவிர்த்துவிட்டே தங்கள் சாட்சியங்களை காணாமல் போனோரின் உறவுகள் வழங்கியிருந்தார்கள். ஒரு சிலர் மட்டுமே படையினர் தங்கள் உறவுகளைப் பிடித்துச் சென்றதாக துணிச்சலோடு சொல்லியிருந்தார்கள். ஆனால் இப்போது இந்தத் துணிச்சல் காணாமல் போனோரின் உறவுகள் எல்லோருக்குமே வந்துவிட்டது.

"நித்திரைப் பாயில கிடந்த என்ர பிள்ளைய எங்கட ஊர் முகாமிலிருந்த ஆமிக்கொமாண்டர்தான் வந்து பிடிச்சுக்கொண்டு போனவர்."

"காசு தரச்சொல்லி கருணாகுழு கேட்டது. ஆனால் நாங்கள் குடுக்கேல. அதாலதான் அவங்கள் (கருணா குழு) என்ர பிள்ளையை கடத்திக் கொண்டு போட்டாங்கள்"

"முதல்நாள் ஈ.பி.டி.பி. வந்து விசாரிச்சுட்டுப் போனவங்கள். அடுத்தநாள் என்ர பிள்ளைய காணேல. அப்ப உவங்கள்தானே (ஈ.பி.டி.பி.) என்ர பிள்ளைய கொண்டுபோயிருப்பாங்கள்"

என்றெல்லாம் தங்கள் பிள்ளைகளைக் கடத்திச் சென்றவர்கள் யார் என்று மிகத் தெளிவாகவே தங்கள் சாட்சியங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். இனிமேல் 'இனந்தெரியாதவர்கள்தான் இந்தக் கடத்தல்களில் இறங்கினார்கள்' என்றோ அல்லது 'புலிகள்தான் கடத்திச் சென்றார்கள்' என்றோ சர்வதேசத்தை இலங்கை அரசு 'பேய்க்காட்ட' முடியாது. இனந்தெரியாதோர் என்ற கவசம் காணாமற்போனோரின் உறவுகளின் உண்மை உரைப்பின் மூலம் அரசிடம் இருந்து தொலைந்து போய் விட்டது. இனிக் கூரம்புகள் நாலாதிசையிலிருந்தும் பாயும். அந்தப் பயத்திலாவது காணாமற்போனோரை மீளத்தருமா அரசு?


ஹரீஸ்

# கண்ணீரில் உடையும் மௌனங்கள்

மௌனங்கள் உடைபடத் தொடங்கிவிட்டன. உயிரே போனாலும் பரவாயில்லை. இனியும் உண்மைகளை மறைக்கமுடியாது என்ற நிலைக்கு பெரும்பாலான மக்கள் வந்துவிட்டார்கள். நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக புகைப்படங்களையும், மேலோட்டமான விடயங்களையும், தங்கள் உறவுகளைக் கவர்ந்து சென்றவர்கள் பற்றிய மழுப்பலான தகவல்களையும் வெளியிட்ட காணாமல் போனோரின் உறவுகள், இப்போது எந்தவித ஒளிப்பு மறைப்புகளுமின்றி உண்மையைப் பச்சையாகப் போட்டுடைக்க முன்வந்துவிட்டார்கள். இதனை காணாமல் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் தெளிவாகவே உணரமுடிந்தது.

இந்த அமர்வின் போது, திரை மறைவில் கமராக்களுடன் இராணுவப் புலனாய்வாளர்கள் நின்றிருந்த போதும், ஊடகக்காரர்களிடம் ஆணைக்குழு முன்னிலையிலும் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதி பற்றி ஒன்றும் விடாமல் அவர்கள் சொல்லத் தொடங்கினார்கள்.

"தம்பிமார் உங்களை என்ர பிள்ளையள் மாதிரிக் கேக்கிறன். என்ர பிள்ளைக்காக ஒரு தரம் குரல் கொடுங்கோ. எனக்கெண்டு யாருமேயில்லை. இருந்த பிள்ளையையும் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். என்ர பிள்ளைக்காக ஒரு குரல்.....ஒரு குரல்.... நான் தற்கொலைக்கும் முயன்று தோற்றுவிட்டேன்" என்ற ஒரு தாயின் கதறல் அனைவர் கண்களிலும் கண்ணீரைக் கசிய வைத்தது. இது போல நிறையச் சாட்சியங்கள். அந்தக் கண்ணீர் ஆற்றில் இருந்து சில துளிகள் ஈரத்தோடு இங்கே.



ஒளிப்படங்கள்: விருமாண்டி

### சாட்சியம் 01: நள்ளிரவுக் கைது

என்ர மகன் கொஞ்ச வருத்தக்காரன். அன்டைக்கு 23.09.1996.அன்று சாமம் 11.30 இருக்கும். எங்கட வீட்டை ஆமிக்காரர் ரவுண்டப் பண்ணிட்டாங்கள். நாங்கள் எல்லாம் நல்ல நித்திரை. நானும் என்ர தங்கச்சியின் பிள்ளையும் விறாந்தையில படுத்திருந்தோம். கறண்ட்டும் இல்ல. அவங்கள் நூறுபேருக்கு மேல இருக்கும். என்னைத் தாண்டி பிள்ளை இருக்கிற இடம் நோக்கி போக முயன்றாங்கள். நான் எழும்பி தீப்பெட்டியை எடுத்துவிளக்கை கொழுத்த வெளிக்கிட்டன். என்ர தலையில பிடிச்சு அமத்தி "எழும்பாதை" எண்டு மிரட்டினாங்கள். ஒண்டும் தெரியக் கூடாது எண்டதுக்காக ரோர்ச் லைற்றை முகத்துக்கு நேர அடிச்சாங்கள். என்ர கையில இருந்த தீப்பெட்டியையும் பறிச்சு எறிஞ்சாங்கள். வீட்டுக்குள்ள போய் மகனை பிடிச்சு அடிச்சு கண்ணைக்கட்டி வெளியில இழுத்துக் கொண்டு வந்தாங்கள். நான் கெஞ்சினேன். பிள்ளையை விடவில்லை. "ஒருவிசாரணை இருக்கு. முடிய திருப்பிக் கொண்டு வந்து விட்டுவிடுறம்" எண்டாங்கள். அதுக்குப் பிறகு பிள்ளையைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் உடையும் மௌனங்கள்



## சாட்சி-02: கதிரையில் இருத்தி கணவரிடம் விசாரணை

என்ர கணவரின் உண்மையான பேர் றேகன். அவரை இயக்கத்தில ரேகா எண்டுதான் கூப்பிடுவினம். புலிகளின் மருத்துவப்பிரிவுக்கு அவர்தான் பொறுப்பா இருந்தவர்.

2009 மே 17ஆம் திகதி. அண்டைக்கு சரியான சண்டை நடந்தது. இராணுவம் போராளிகளை சரணடையுமாறு ஒலி பெருக்கி மூலம் அறிவித்து கொண்டிருந்தது. நானும் என் கணவரும் பிள்ளைகளுமாக இராணுவத்திடம் சரணடைந்தோம். என்னையும் கணவரையும் தனியாக விசாரணை செய்த இராணுவத்தினர் என் கணவரை வேறொரு வாகனத்திலும் என்னையும் பிள்ளைகளையும் வேறொரு வாகனத்திலும் ஏற்றினார்கள். கணவர் பயணித்த வாகனத்தில் வைத்தியர் சிவபாலன், மனோஜ் (விடுதலைப்புலிகளின் முன்னாள் மருத்துவப் பிரிவு உப பொறுப்பாளர்) ஆகியோர் உட்பட நூற்றுக்கணக்கான விடுதலைப்புலி உறுப்பினர்களும் வாகனத்தில் இருந்தனர். நானும் எனது தாயும் எனது பிள்ளைகளும் சோதனைச் சாவடிக்கு கொண்டுசெல்லப் பட்டோம்.

**இராணுவத்தினர் ஒலி பெருக்கி மூலம் விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகன் கூட சரணடைந்து விட்டார். ஏனைய விடுதலைப்புலி உறுப்பினர்களும் பயமின்றி சரணடையலாம். எந்தப் பிரச்சினையுமில்லை என ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தனர்.**

அங்கு என் கணவரைத் தவிர வைத்தியர் சிவபாலன், மனோஜ் ஆகியோர் வாகனத்திலிருந்து இருந்து இறக்கப்பட்டதை கண்டேன். என் கணவர் பயணம் செய்த குறித்தவாகனம் சில மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பின் கணவரை ஒருஉயர் அதிகாரி விசாரணைக்கு உட்படுத்தியதை நான் கண்டேன். இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் "விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகன் கூட சரணடைந்து விட்டார். ஏனைய விடுதலைப்புலி உறுப்பினர்களும் பயமின்றி சரணடையலாம். எந்தப் பிரச்சினையுமில்லை" என ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது வட்டுவாகலில் என்னை விசாரணை செய்த உயரதிகாரி கதிரையில் அமர்த்தப்பட்டு என் கணவர் விசாரிக்கப்பட்டு கொண்டிருப்பதை எனக்கு காட்டினார். நான் அவரிடம் 'என் கணவருடன் பேச முடியுமா' எனக் கேட்டேன். அதற்கந்த அதிகாரி "இல்லையில்லை அவரை விசாரித்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பேச முடியாது" எனத் தமிழில் குறிப்பிட்டார். அதன் பின் நான் வலயம் 4 க்கு மாற்றப் பட்டேன். அதற்குப் பின் நான் என் கணவரை காணவேயில்லை.



எனது கணவரை விசாரித்த அதிகாரியை எனக்குத் தெரியாது.பெயரைக் கேட்கவும் முடியாது. பெயரைச் சொல்லி விசாரிக்கும் நிலையிலும் அவர்கள் இல்லை. ஆனால் வட்டுவாகலில் நான் எனது கணவரை ஒப்படைத்த இராணுவ அதிகாரியைத் துல்லியமாக அடையாளம் காட்ட முடியும்.

அதன் பின் நானும் என் குழந்தைகளும் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். இருபிள்ளைகளும் நன்றாகப் படிக்கிறார்கள். ஆனால் அவர்களை வளர்க்க எனக்கு வசதியில்லை. நான் ஒரு தடவை தற்கொலைக்கு கூட முயன்றிருந்தேன். இங்கே இருந்த வீட்டை விற்றுத்தான் கிளிநொச்சியில் வீடு வாங்கினோம். அதைப் படையினர் பறித்துக் கொண்டு தரமாட்டோம் என்கிறார்கள். 5 வருடங்களாக ஓடித்திரிகிறேன். பிரதேச செயலாளர், அரச அதிபர் எல்லோரும் உறுதிப்படுத்திய பின்னும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை என்று கூறி வீட்டைத்தர மறுக்கிறார்கள். என் உரிமைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். என் அப்பாவை சின்ன வயதிலேயே இழந்துவிட்டேன். என் கணவரைப் பறிகொடுத்துவிட்டேன். தற்கொலை செய்வதைத் தவிர வேறுவழி இல்லை. என் வீடும் என்னிடம் இல்லை. நான் இது வரை எந்த ஆணைக்குழு முன்னிலையிலும் சாட்சி சொல்லவில்லை. உங்கள் முன் தான் சாட்சியமளித்திருக்கிறேன். என் பிள்ளைகளுக்கும் எனக்கும் நீங்கள் தான் பாதுகாப்புத் தர வேண்டும். அதற்கு நீங்கள் தான் பொறுப்பு .

## சாட்சியம் 03:விசாரிச்சுப் போட்டு விடுவம்

எனது பிள்ளை பிரேமதாஸன் திலிபன். வயது 24.அண்டைக்கு 17.09.2006 . இரவு வீட்டில கறண்ட் இல்லை. சாமம் இருக்கும். நாங்கள் நித்திரையையாய் இருந்தம். எங்கட மெயின்றோட்டில ஒருவாகனம் வந்து நிண்டுது. வந்தவர்களில் ஆமி உடுப்போடையும் சிவில் உடுப்போடையும் இருந்தாங்கள். வீட்டுக் கேற்றைத் திறந்து உள்ளுக்க வந்து கதவை தட்டினாங்கள்.நாங்கள் திறக்கேலை. யன்னலுக்குள்ளால கதவைத் திறக்கச் சொல்லி மிரட்டினாங்கள். என்ர மகன் அம்மா என்னெண்டு கேட்டபம். கதவைத் திற என்றான். அவன் ஓ.எல் எக்சாம் எடுத்துட்டு கொம்பியூட்டர் படிச்சுக் கொண்டிருந்தவன். வந்தவங்கள் அவனைப் பிடிச்சு இழுத்து கொண்டு போனாங்கள். நாங்கள் கத்திக் குழறிக் கொண்டு வெளியில போனோம். இது ஊரடங்கு நேரம். நீங்கள் வெளியில வரக் கூடாது.விசாரணை முடிய மகனை விடுறம் எண்டாங்கள். நாங்கள் காலமை எழும்பி பார்க்க கார்ட் ஒண்டு கிடந்தது. அதில கருணா குழுவெண்டு எழுதியிருந்தது. என்ர மகனைத் தேடியலையாத இடம் இல்லை.



## சாட்சியம் -04: மிஞ்சி இருந்த பிள்ளையும் போனதே

எனது சொந்த இடம் கோப்பாய். எனது மகன் 'வீட்ஸ்' என்ற தொண்டு நிறுவனத்தில் பணி புரிந்தவர். அன்று 5.06.2008.ஊரடங்கு நேரம் எனது பிள்ளை கலட்டி அம்மன் கோயில் திருவிழா நடந்ததால் நண்பனுடன் அவன் வீட்டைதான் தங்கியிருந்தவன். காலை 4.30 மணிக்கு ஈ.பி.டி.பி க்காரர் அங்கே போய் அவன்ர நண்பனையும் அவனையும் விசாரிச்சவை. பிறகு 5 மணிக்கு வீட்டுக்கு அத்துமீறி புகுந்த 3 பேர் அவன் நண்பனையும் அவனையும் கடத்திக் கொண்டுபோயிட்டினம். எனக்கு காலமை அவன்ர நண்பன்ர அப்பா வந்து சொல்லித்தான் விடயம் தெரியும். நாங்கள் தேடாத இடமில்லை. இவன் கடத்தப்படுகிறதுக்கு முதல் 21.12.2007 அன்று எனதுமூத்த மகன் இருபாலை மெயின் றோட்டில கோப்பாய் மகாவித்தியாலயத்துக்கு பக்கத்தில வைத்து இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மிஞ்சியிருந்த பிள்ளையையும் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். என்ர பிள்ளையை மீட்டு என்னட்டத்தாங்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்




## தாய்

பொறுமையின் சிகரம்
நல்லுணர்வுகளின் இருப்பிடம்
தியாகத்தின் சின்னம்
நல்வாழ்வின் வழிகாட்டி
என்று கூறி விளக்க
முடியாதவளாக
மண்ணின் விளக்காக
தரணியிலே விளங்குகிறாள்
என்னை ஈன்றெடுத்த
அன்புத்தாய்

**வ. நிறோஜினி,**
**வரணி.**

## தொடர் இயக்கம்



பலரின் சயனங்களில்
உன் முடிவு
குழையத் தொடங்கியிருக்கலாம்
எண்ணங்களின் தொடர்ச்சி
அவ்வளவு வலிமையானது

சிறு தடங்கல்கள் இல்லாமல்
காற்றாடி உனக்குள் பிரவேசிக்க
அனுமதி கேட்கலாம்
உன் உறவுக்காக

அவளுக்குத் தெரியாமலே
உன்வியர்வை
அவள் வதனத்தில்
வழிந்திருக்கிறது.
ஒரு நிறுத்தத்தில்
சிறு ஆரம்பம்

உனக்கான அனுதாபங்கள்
நகரத்தின் பட்டியலில்
தடை செய்யப்படும்

ஒரு கும்ப மேளாவில்
தொலைந்து போன
துறவி போல

உன் மனம்
காவியில் தொங்க
முற்படலாம்

தற்கொலைக்குத்
தெரியாமல்
உன்னை
தற்காத்துக் கொள்ள
ஒரு போர்வாள்
இங்கே
ஒளி விடட்டும்

நீ திரும்பி வா...
உன் மூச்சில்
பல உயிர்கள்வாழக்
கற்றுக் கொள்கின்றன.

**சா. ரமேஸ்குமார்,**
**மருதனார்மடம்.**

## அவள்...

அன்பின் வலுவால்
கிடைத்த வரன்
சொந்தத்தின் வழி
வந்தஉறவு

ஆபரணங்கள்
அணியப்படாத
சூழலில் சந்தித்த
அது வரை
அறியப்படாத உறவு

இன்று போய்
நாளை வருகிறேன்
கவனம் சொல்லிப்

புறப்பட்டவள்
ஈரவிழிகளோடு
இமை வெட்டாமல்
என் முகம்
நோக்கிச் சென்றவள்

உண்மையை
உணர்ந்திருப்பாள் போல்!
என் மனம்
பின் நோக்கி எண்ணியது

ஊமையாக
வந்து கிடந்தாள்
பேழையில்
வாடிய முகத்துடன்

**கே. பிரதிக்ஷா,**
**கரவெட்டி.**

## தராதரம்

இராத்திரிமுழுவதும்
விழித்திருந்து
மெழுகுதிரியில்
படித்த எனக்கு
பட்டமும் பதக்கமும்
வீட்டுச்சுவரில்
மாட்டியபடி
வேலை ஏதும்
இல்லை

அரசியல்வாதிக்கு
அடிவருடியாக
இருந்த
நண்பனுக்கு
கிடைத்திருக்கிறது
நன்னடத்தை
வேலைவாய்ப்பு!

**மு.கா. முகம்மது அஸ்வர்,**
**திருகோணமலை.**




## முதிர் கன்னிகள்

அழகாகப் மலர்ந்திருந்தும்
அர்ச்சிக்கப்படாமல் போன
கொண்டல் பூக்களாக...

**கு. தவசீலன்,**
**பளை**

## என் அம்மா



பத்து மாதம் உன் கருப்பையில்
என்னை அடைகாத்தாய்
அனுதினமும் என் நலனில்
அவதானமாய் இருந்தாய்

நிலமங்கையின் கையில் நான் தவழ
நித்தமும் தவம் இருந்தாய்
கண்ணை இமை காப்பது போல்
கவனமுடன் என்னை வளர்த்தாய்

தன்னலமே இல்லாத தாயாகத்
தரணியிலே நீ இருந்தாய்
எண்ணெழுத்தும் கற்க வைத்து
எல்லோரும் மதிக்க வைத்தாய்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உன் போல் ஒரு உறவை
ஏழேழு ஜென்மத்திலும்
எட்டியும் பிடிக்க முடியுமா?

அம்மா நீ எந்தன் - உயிர்
மூச்சு என்றே தான் சொல்லுவேன்
மறுபிறவியிலும் நான் உனக்கு
மகளாக வேண்டும் அம்மா

**வ. நிறோயினி,**
**வரணி.**



## மக்கட்பதர்

மட்டுப்படுத்தப்பட்ட
சுதந்திர சுகங்கள்
ஒரு தலைப்பட்சமாக
ஓரங்கட்டப்பட்டதால்
அதே ஏக்கம்
அதே எதிர்பார்ப்பு
அதே ஏழ்மை
இன்னமும் இங்கே அப்படியே
இருக்கின்றன!

கொடுப்பவர்கள்
கூட்டுத் தெரிந்து
கொடுப்பதால்
வாடிக்கை மாறினாலும்

வாடிக்கையாளர்கள்
மாறுவதே இல்லை!

சுயலாபங்களுக்கு
சொற்ப சலுகைகளுக்கு
சொந்த நட்புகளையே
சோரம்போகச் செய்பவர்கள்,

வீழ்ந்தாலும்
வெட்கம் கெட்டாலும்
தாழ்ந்து போன
தமிழினத்தின்
தலையிலே
ஏறி மிதித்து
என்றும் பயணித்து

**நா. ஜெயபாலன்,**
**மிமிலை.**

## உலகில்


உண்மையாக வாழ்வோம்
உண்மையாக இல்லை
உண்மையாகவா என்று
கேட்பீர்
உண்மைகள் தொலைந்த
உண்மைகள் கடத்தப்பட்டு
உண்மைகளாகப் போலிகள்.
உண்மைகளின் மதிப்பு
உண்மையின் வேடங்களுக்கு
உண்மைகள் புதைந்து
உண்மையின் கபடமாக
உண்மையில் வாழுகின்றனர்

**வாசீகன்,**
**இணுவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிநிழலில் வாழ்பவன்

தொகுப்பு தபின்



**தமிழ் சினிமாவுக்கான இன்னொரு பயணிப்பை நிகழ்த்திப்போன கலைஞனை காலம் அள்ளியெடுத்துவிட்டது. இயற்கையோடு ஒன்றித்துப்போன அதியுன்னதக் கலைஞனின் காலத்தின் அழைப்பை எப்படி உதறித்தள்ள முடியும்? போயே விட்டான், அழியாப் படைப்புகளை முதுசொமாகத் தந்துவிட்டு.

இலங்கையில் பிறந்தவர்களுக்கு தமிழ் நாட்டுக் கலையுலகம் உரிய அங்கீகாரம் வழங்கு வதில்லை என்று சொல்லப்பட்டு வந்த கருத்தை தன் ஆற்றல் மூலம் பொய்ப்பித்தவர் பாலு மகேந்திரா. மட்டக்களப்பில் பிறந்த பாலு மகேந்திரா தனியே கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் உரியவரல்லர். அவர் கல்வி கற்றது வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக்கல்லூரியில் தான். எனவே யாழ்ப்பாணத்தவர்களும் தங்கள் பிள்ளையொருவன் தமிழகத்தில் கால் பதித்து, இந்தியா என்ற வட்டத்தையும் தாண்டி சர்வதேச ரீதியில் பேசப்படும் திரைக்கலைப் படைப்பாளியாக மாறி நின்ற போது பூரித்துத்தான் போனார்கள்.

எளிமையும், கலையின் மீதும் மனிதர்கள் மீதும் நேசிப்பும் வாஞ்சையும் கொண்ட கலை ஞனான பாலு மகேந்திரா, தன் படைப்புகளைப் போலவே அழியாத கோல மாகவே வாழ்ந்தவர்.

ஏற்கனவே ஒருமுறை–2004 ஆம் ஆண்டு–பாலுமகேந்திராவை தாக்கியிருந்த மாரடைப்பு இரண்டாவது முறையாகவும் தன் கைவரிசையை அவர் மீது காட்டியது. இந்த முறை விதியை வெல்ல அவர் முனையவில்லை. விதியின் கைபிடித்து சென்றுவிட்டது மூன்றாம் பிறை.

பாலு மகேந்திராவின் சாவின் பின்னர் அவரின் அந்தரங்க வாழ்வு பற்றிய சில விடயங் கள் மீண்டும் பேசுபொருளாகின. குறிப்பாக அவரது இன்னொரு மனை வியான மௌனி காவின் பெயர் பெரிதாக ஊடகங்களில் அடிபட்டது.

என்னுடைய கணவனின் உடலைப் பார்க்கத் தட என்னை அனுமதிக்கிறார்களில்லை என்று ஊடகங்கள் மூலம் கண்ணீரால் மௌனிகா பேசுமளவுக்கு, அவருக்கு தடை போடப்பட்டிருந்தது. பின்னர் திரையுலகப் பிரமுகர் கள் சிலரின் தலையீட்டால் சில நிமிடங்கள் பாலுமகேந் திராவின் உடலைப் பார்க்கும் சந்தர்ப் பம் மௌனிகாவுக்கு கிட்டியது.

பாலு மகேந்திராவின் இன்னொரு மனைவி யாக இருந்தபோதும், சொத்திலோ, அவரது வாழ்விலோ, படுக்கையறையிலோ மௌனிகா பங்கு கேட்டதில்லை. அதிலும் பாலு மகேந்திரா வின் மனைவி அகிலாவின் மனம் நோகக் கூடாது என்பதற்காக பாலு மகேந்திராவை மனதில் கணவராக வரித்துக் கொண்டு விலகியே வாழ்ந்தவர். திரையுலகில் பாலு மகேந்திரா பொருளாதார ரீதியாக வீழ்ந்திருந்த போது, சின்னத்திரையின் பக்கம் அவரைக் கொண்டு வந்து, உதவிக்கரம் நீட்டியவர் மௌனிகா. இப்போது கணவரின் உடலை, நிமிடக்கணக்கில் பார்க்கவும் பிறரின் அனுமதியை அவர் பெறவேண்டியிருக்கிறது.

எனினும் பாலு மகேந்திரா தனக்கும் மௌனிகாவுக்கும் இடையிலான உறவை ஒருபோதும் மறைத்ததில்லை. முதல் முறை அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மீண்ட பின்னர் அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலே இதற்கு ஒரு உதாரணம்.

**அழியாக் கோலமானவன் பாலு மகேந்திரா**
**(பாலநாதன் பெஞ்சமின் மகேந்திரன்)**

**பிறப்பு:** மே 20, 1939 அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை
**இறப்பு:** பெப்ரவரி 13, 2014 (அகவை 74) சென்னை, இந்தியா.
**பணி:** திரைப்பட இயக்குநர், ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், தயாரிப்பாளர்.

**பாலுமகேந்திராவின் படைப்புகள்**

* மூடுபனி
* மஞ்சு மூடல் மஞ்சு (மலையாளம்)
* ஓலங்கள் (மலையாளம்)
* நீரக்ஷ்னா (தெலுங்கு)
* சத்மா (ஹிந்தி)
* ஊமை குயில்
* மூன்றாம் பிறை
* நீங்கள் கேட்டவை
* உன் கண்ணில் நீர் வழிந்தால்
* யாத்ரா
* ரெண்டு தொகல திட்ட (தெலுங்கு)
* இரட்டை வால் குருவி
* வீடு
* சந்தியாராகம்
* வண்ண வண்ண பூக்கள்
* பூந்தேன் அருவி
* சுவன்னு(மலையாளம்)
* சக்ர வியூகம்
* மறுபடியும்
* சதி லீலாவதி
* அவுர் ஏக் ப்ரேம் கஹானி (ஹிந்தி)
* ராமன் அப்துல்லா
* ஜூலி கணபதி
* அது ஒரு கனாக்காலம்
* தலைமுறைகள்

**கேள்வி- நாலைந்து வாரங்களுக்கு முன்னால், 'பாலுமகேந்திராவுக்கு மாரடைப்பு' என்ற செய்தியைப் பார்த்தவர்கள் ஒரு கணம் அதிர்ந்துபோயிருப்பார்கள். உண்மையில் என்ன நடந்தது?**

பாலு- ஜூலை 15 ஆம் திகதி அதிகாலை, கட்டிலில் இருந்து எழுந்தேன். தரையில் காலை ஊன்றி ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை.

பிடுங்கி எறியப்பட்டதுபோல் சுவரில் மோதி அப்படியே விழுந்தேன். என் இடது கால், உடம்பின் கனம் தாங்காமல் துவண்டு சுருண்டது.

எழுந்திருக்க முயற்சி செய்தேன். ம்ஹூஉம்... முடியவில்லை. கை, கால்களை அசைக்கமுடியவில்லை. 'அட்டா... என்னவோ பிரச்சினை என்று புரிந்துவிட்டது. உடனே என் மனைவி அகிலா ஓடிவந்தார். என்உதவியாளர் செந்திலும் உடன்வர, பதினைந்து நிமிஷத்தில் விஜயா மருத்துவமனையில் இருந்தேன்.

'அது ஒரு கனாக் காலம்' படப்பிடிப்புக்கு தனுஷ் திகதிகளை ஒதுக்கித் தராததால் மன உளைச்சல் ஏற்பட்டு, அதனால் மாரடைப்பு வந்தது என்று வந்த செய்தியில் துளியும் உண்மை கிடையாது. தனுஷுடன் பணிபுரிவது சந்தோஷமான விஷயம்.

என் மன உளைச்சலுக்கான காரணங்கள் வேறு. எனது ஜூலி கணபதி படம் தேசிய விருதுக்கு அனுப்பப்படவில்லை என்ற செய்தி அறிந்ததும் அதிர்ந்துபோனேன். படப்பெட்டியை வாங்கிப் போட்டிப் படிவங்களை நிரப்பி, நானே அதை அனுப்பியிருக்க வேண்டும்.

சரிதாவுக்குக் கிடைத்திருக்கவேண்டிய தேசிய விருது என் கவனக்குறைவு காரணமாகக் கிடைக்காமல் போய்விட்டதே என்று வருத்தமாகிவிட்டது.

அடுத்து, எனது சம்பளப் பாக்கியில் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருவதாகச் சொல்லியிருந்த தயாரிப்பாளரால், ஏனோ தரமுடியவில்லை. பாவம், அவருக்கு அவருடைய பிரச்சினைகள். அதே நேரத் தில் நான் பணம் தரவேண்டிய ஒருவர், நான் வேலை செய்துகொண்டிருந்த இடத்திற்கே வந்து பலர் முன்னிலையில் என்னை அவமரியாதையாகப் பேசிச் சென்றார். அதுவும் மனஉளைச்சலுக்கான காரணம். பிறகு, எனது மருத்துவச் செலவுகளை மகன் ஷங்கியும், எனது துணைவி மௌனிகாவும் கவனித்துக் கொண்டார்கள்.

**கேள்வி- மௌனிகா உங்கள் துணைவியா?**

பாலு- ஆமாம். மௌனிகாவும் என் மனைவி தான். இந்த இடத்தில் மௌனியைப் பற்றியும், எனக்கும் அவளுக்குமான உறவு பற்றியும் நான் கொஞ்சம் விரிவாகப் பேச வேண்டியிருக்கிறது.

மௌனிக்கும் எனக்குமான உறவு ஒரு நடிகைக்கும், இயக்குநருக்குமான படுக்கையறை சம்பந்தப்பட்ட உறவு என்றுதான் பலர் நினைப்பார்கள். ஆனால், உண்மை அதுவல்ல! ஏறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன் ஆரம்பித்த உறவு அது. இனியும் எதையும் நான் மறைப்பதற்கில்லை.

மிகவும் உடைந்துபோன ஒரு தருணத்தில், நான் உங்கள் கூடவே இருக்கட்டுமா? என்று கண்கலங்கி

**(10 ஆம் பக்கம் பார்க்க)**

## மௌனிகா என் மனைவிதான்
## – பாலு மகேந்திராவின் வாக்குமூலம் (2004)

**ஏறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன் ஆரம்பித்த உறவு அது. இனியும் எதையும் நான் மறைப்பதற்கில்லை.**



மௌனிகாவின் அஞ்சலி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியப்பெண் கொலை; உண்மையா?




"பேஸ்புக்கில் இணைந்ததால் சிரியப் பெண் கல்லால் அடித்துக்கொலை" என்ற ஒரு தகவல் பேஸ்புக்கிலும் இணையத்தளங்களிலும் மிக வேகமாக பரப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதனை சில இணையத்தளங்களும், முகநூல் குழுமங்களும் எவ்வித ஆதாரமும் இன்றி, கொஞ்சமும் ஆராயாமல் வெளியிட்டு வருகின்றன.

உண்மையில் அந்தப் புகைப்படம்(ஒரு பெண்ணை கல்லால் அடித்து கொல்வது போன்ற காட்சி) ஒரு சினிமாப் படத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும். அந்தப் படத்தின் பெயர் The Stoning of Soraya M. அந்தக் காட்சியில் நடித்தவர் Mozhan Marno என்ற ஈரானிய நடிகை.

2010 ஆம் ஆண்டு சைரஸ் நவ்ரஸ்தேஹ் என்பவரால் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அந்தத் திரைப் படத்தில் ஈரானில் உள்ள ஒரு கிராமத்தில் மேற்படி கதை நடப்பதாக ஒரு காட்சி அமைத்திருந்தார்கள். அப்போது அந்தப் படம் ஈரானில் தடை செய்யப்பட்டு இருந்தது. அதிலிருந்தே ஒரு காட்சியை உருவி சிரியப் பெண் ஒருவர் பேஸ்புக்கில் இணைந்தால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பரபரப்பைக் கிளப்பியிருக்கிறார்கள். சிரியாவுக்கு எதிராக மனிதநேயம் உள்ளவர்களும் கருத்துச் சுதந்திரத்தை வேண்டுபவர்களும் அணிதிரளவேண்டும் என்பதற்காகவே இந்த நாடகம் அமெரிக்காவின் கைக்கூலிகளால் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

# மௌனிகா என் மனைவிதான்
## – பாலு மகேந்திராவின் வாக்குமூலம்

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நின்ற, அந்தச் சின்னப் பெண்ணுக்குப் புரியும்படி புத்திமதி சொல்லி, அந்த உறவை நான் முளையிலேயே கிள்ளிப் போட்டிருக்க வேண்டும். ஏனோ, அதை நான் செய்யவில்லை.

அந்த அபலைப் பெண்ணின் கேள்விக்குப் பின்னே இருந்த வேதனை, அவமானம், வலி அனைத்தையும் நான் அறிவேன். புத்திபூர்வமாக வாழாமல், உணர்வு பூர்வமாக மட்டுமே வாழத் தெரிந்த என்னை அது வெகுவாகப் பாதித்தது. அதன் விளைவுதான் எனக்கும் மௌனிக்குமான உறவு.

சினிமாவையும், இலக்கியத்தையும் அசுர வெறியோடு நேசிக்கும் எனக்கு, என் வாழ்க்கைத்துணையும் சினிமாவோடும், இலக்கியத் தோடும் சம்பந்தப்பட்டவளாக, என் அலைவரிசையில் இருப்பவளாக வேண்டும் என்று ஒரு பேராசை. இது அபத்தமான ஆசை, முட்டாள்தனமான எதிர்பார்ப்பு என்பதும் எனக்குத் தெரியும். அபத்தங்களும் முட்டாள்தனமும் நிறைந்ததுதான் என் வாழ்க்கை. ஏகப்பட்ட குழப்பங்கள் நிறைந்த என் வாழ்க்கையில் நேர்த்தியாக நான் வைத்திருக்கும் ஒரே விஷயம் சினிமாதான்.

இந்த உறவை ஆரம்பிப்பதற்கு முன், என் அகிலாவைப் பற்றி நான் யோசித்திருக்கவேண்டும். இந்த உறவு எவ்வளவு தூரம் அவளைப் புண்படுத்தும், வேதனைக்குள்ளாக்கும் என்றெல்லாம் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். வாழ்க்கையை அந்தந்த நொடிகளாகவே இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கிற எனக்கு என் அகிலாவின் துக்கத்தை நினைத்துப் பார்க்க அப்போது தோன்றவில்லை. உள்ளும் புறமும் அழகானவள் அகிலா. எனக்கு மனைவியாக வந்தபோது, அவளுக்குப் பதினெட்டு வயது. சரியாகப் புடவை கட்டக்கூடத் தெரியாத வெகுளிப்பெண். அகிலாவைப் போன்ற பத்தினிப் பெண்கள்-பரிசுத்தவதிகள் -புராணகாலத்தில்தான் இருந்திருக்கிறார்கள். இந்த யுகத்தில் பிறந்திருக்க வேண்டிய பெண்ணல்ல அகிலா. என்னைப் போன்ற ஒரு பித்தனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்க வேண்டியவள் அல்ல.

கனவுகளைத் துரத்தியபடி சதா ஓடிக்கொண்டு இருக்கும் நாடோடி நான். எனக்கு மனைவியாக வந்ததுதான் அகிலாவுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய துரதிர்ஷ்டம்.

மனைவியைத்தவிர மற்றொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காத, மனசால்கூட நினைக்காத ஒரு நல்ல ஆண்மகனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்க வேண்டியவள் அகிலா. என்னை மாதிரி ஒரு கோணங்கிக்கு வாழ்க்கைப்பட்டது அவள் விதி. இந்தப் பத்தினிக்கு வலிகளையும் காயங்களையும் தவிர, வேறு என்ன தந்தேன் என்று நினைக்கும்போது எங்காவது கண்காணாமல் போய்விடத் தோன்றுகிறது!




**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உறவினர்களால் உதவி உண்டு. சிலர் புதிய வாகனம் வாங்குவதற்கு அனுகூலம் ஏற்படும். புத்திரர் அறிவுத்திறன் வளர்ந்து படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். எதிரியினால் துன்பம் வராத சுமுக வாழ்வு உருவாகும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். பெணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, கூடுதல் சன்மானம் பெறுவர். . மாணவர்கள், நண்பர்களின் உதவியால் சில நன்மை பெறுவர்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

நண்பர், உறவினர் சிலரிடம் இருந்த மனக்கிலேசம் சரியாகும். புத்திரரின் கவனக்குறைவான செயலை கண்டிப்பதை விட மாற்று வழிமுறை சொல்லித்தருவதால் அவரிடம் உங்கள் மீதான பாசம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் செழித்து வளர தேவையான அனுகூலம் மற்றும் அரசு சார்ந்த உதவி கிடைக்கும். . பெண்கள் குடும்ப நலன் சிறக்க தேவையான பணி மேற்கொள்வர். மாணவர்கள், படிப்பு தொடர்பான சந்தேகம் தெளிந்து ஆர்வமுடன் படிப்பில் ஈடுபடுவர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திரரின் உடல் நலத்திற்கு சத்து நிறைந்த உணவு தருவதும், சீரான ஓய்வு பின்பற்ற உதவு வதும் நற்பலன் தரும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும். தொழில் வியாபா ரத்தில் கூடுதல் உழைப்பு சராசரி இலக்கை அடைய உதவும். இயந்திர தொழிற் சாலை பணியா ளர் பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், உறவினர் குடும்ப விவகா ரங்களில் கருத்து சொல்வதை தவிர்க்கவும். மாணவர்கள் சாகச விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடாது.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்களைப் பற்றி அவதூறு பேசுபவரிடம் விலகுவது நல்லது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்று வதால், பயணமுறை எளிதாகும். புத்திரர், உங்களின் சொல் கேட்டு செயல்படுவார். புதிய செலவி னங்களுக்காக கொஞ்சம் பணக்கடன் பெறுகிற நிலை ஏற்படலாம். பணியா ளர்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்கக்கூடாது. பெண்கள், குடும்பத்தின் பணவரவுக்கேற்ப, செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

சந்தோஷ மனதுடன் செயல்களில் ஈடுபடுவீர்கள். இளைய சகோதரர் வகையில் மங்கல நிகழ்ச்சி நடத்த, அனுகூலமான சூழ்நிலை உருவாகும். இஷ்ட தெய்வத்திற்கான வழிபாடு சிறப்பாக நடத்துவீர்கள். இல்லறத்துணை கருத்து. ஒற்றுமையுடன் குடும்பநலம் காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். பணியாளர்கள், இலகுவான மனதுடன் செயல்பட்டு பணிஇலக்கு நிறைவேற்றுவர்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

தாயின் அன்பு, ஆலோசனை புதிய நல்வழி காட்டுதல் தரும். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் மற்றும் சிரமம் பற்றி பிறரிடம் பேசவேண்டாம். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், தாய்வீட்டு உதவி கிடைத்து மகிழ்வர். மாணவர்களின் படிப்புக்கு தேவையான பணவசதி கிடைக்கும்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

குடும்ப உறுப்பினர் விரும்புகிற பொருட்களை வாங்கித் தருவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி, சந்தோஷம் நிறைந்திருக்கும். . தொழில்,வியாபாரத்தில் வளர்ச்சி பெற வருகிற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். குடும்ப பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேற்றுவர். மாணவர்கள், படிப்புக்கான பணவசதி, திருப்திகர அளவில் கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்துகிற அனுகூலம் உண்டு. புத்திரரின் கவனக்குறைவான செயலை, சிறந்த ஆலோசனை வழங்கி சரி செய்வீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர், மங்கல நிகழ்ச்சி தொடர்பாக சில ஆலோசனை கேட்பர். கூடுதல் உழைப்பினால் உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த வேலை வாய்ப்பு கிடைக்கும். குடும்ப பெண்கள், சேமிப்பு பணத்தை அத்தியாவசிய செலவுக்கு பயன்படுத்துவீர்கள்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

புத்திரர் தம் எதிர்பார்ப்பு நிறைவேற, தாமதம் ஆவதால் அதிருப்தி மனப்பான்மை கொள்வர். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் சிலரிடம் அவப் பெயர் பெறுகிற நிலைமை ஏற்படலாம்.பணியாளர்கள், பணியிடத்தில் பொது விஷயங்களை பற்றி பேச வேண்டாம். பெண்கள் வித விதமான உணவு தயாரித்து, குடும்ப உறுப்பினர்களை நன்கு உபசரிப்பீர்கள்.

**மகரம்**

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு வகை உண்ண வேண்டாம். இல்லறத்துணை நீங்கள் விரும்பிய பரிசுப்பொருள் வாங்கி தருவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை படிப்படியாக உருவாகும். பணியாளர்கள், பொறுப்பை உணர்ந்து செயல்பட்டு சலுகை பெறுவர். பெண்கள், சேமிப்பு பணத்தை குடும்ப செலவுக்கு பயன்படுத்துவர். மாணவர்கள், வெளிவட்டாரங்களில் சுற்றுவதை தவிர்க்க வேண்டும்.

**கும்பம்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

புத்திரர் அறிவுத்திறன் வளர்ந்து, படிப்பில் முன்னேற்றகரமான பலன் பெறுவர். எதிரியின் கெடு செயலை சமயோசிதமாக எதிர்கொள்வீர்கள். இல்லறத்துணை குடும்ப நலனில் பாசமும், நேசமும் கொள்வர். தொழில், வியாபாரத்தில் உருவாகிற நெருக்கடியான சூழ்நிலையை மாற்று உபாயத்தால் சரி செய்வது அவசியம். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், கணவரின் அன்பு, பாசத்தினால் மனதில் பெருமிதம் கொள்வர். மாணவர்கள், சகமாணவர்களின் உதவியால் படிப்பில் முக்கிய இடத்தை பிடிப்பர்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரர் கருணை மிகுந்த எண்ணங்களுடன், நண்பருக்கு உதவுவர்.உடல் நலஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை, சீரான ஓய்வு உதவும். இல்லறத்துணையின் மனதில், உங்கள் மீதான நம்பிக்கைக்கு குறை எதுவும் வராமல், வாழ்வியல் நடைமுறை பேணுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையில் தேக்கநிலை உருவாகலாம்; கவனம் தேவை. பணியாளர்கள், கூடுதல் அக்கறையுடன் பணியில் ஈடுபாடு கொள்வது அவசியமாகும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள், படிப்பில் சிறந்த இடம் பெற கூடுதல் முயற்சி உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 1 ஆவது மற்றும் ஒரேயொரு

## நிறுவனமாக வாடிக்கையாளர்களின் பாதுகாப்பிற்குத் தம்மை அர்ப்பணித்த ஊழியர்களைக் கொண்ட 13 தலைசிறந்த உலக நிறுவனங்களுள் ஒன்றாக



LOLC
மைக்ரோ கிறெடிட்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

Client Protection Certified
the smart campaign
Awarded December 2013

## சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது

உற்சாகமுள்ள மக்களின் வாழ்வுக்கு வளமூட்டிவரும் LOLC மைக்ரோ கிறெடிட் நிறுவனம், வாடிக்கையாளர்களின் பாதுகாப்பிற்குத் தன்னை அர்ப்பணித்த நிதி நிறுவனங்களுக்கு மட்டும் வழங்கப்படும் Smart Campaign Client Protection சான்றிதழைப் பெற்றுள்ளமை எமக்குப் பெருமையளிக்கிறது. இலங்கையில் பணியாற்றுவதற்கு மிகச் சிறந்த இடமென Great Place to Work Institute அமைப்பினால் தெரிவு செய்யப்பட்ட எமது நிறுவனத்தின் ஊழியர்கள் தமது வாடிக்கையாளர்களின் நலனில் காட்டும் அக்கறையே இந்த மாபெரும் வெற்றிக்கான அடித்தளமாகும். பயனுள்ள நிதித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல், மிதமிஞ்சிய கடன்படுகையின் தவிர்ப்பு, வெளிப்படையான தன்மை, பொறுப்பு வாய்ந்த விலையிடல், வாடிக்கையாளர்களின் இரகசியத் தன்மையைப் பேணுதல் என்பன உள்ளிட்ட பல காரணங்களின் அடிப்படையில் இச் சான்றிதழைப் பெற்ற இலங்கையின் முதலாவது மற்றும் ஒரேயொரு நிதி நிறுவனம் எம்முடையதாகும். உலகம் முழுவதிலும் 13 நிறுவனங்கள் மாத்திரமே இதுவரை இச் சான்றிதழைப் பெற்றுள்ளன. கடந்த 5 வருடங்களாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களின் வாழ்வுக்கு வளமூட்டி, அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டிவரும் எமது தொடர்ச்சியான பயணத்திற்கு இச் சான்றிதழ் ஒரு மகத்தான உந்துசக்தியாகும்.

GREAT PLACE TO WORK
Best companies to work for 2013
Sri Lanka

www.lolcmicrocredit.com

www.smartcampaign.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பத்தில் முருகதாஸ்



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில் இரண்டு வேடங்களில் நடித்து வருகிறார் விஜய். இன்னும் பெயரிடப்படாத இந்தபடத்தின் படப்பிடிப்பு முதற்கட்டமாக கொல்கத்தாவில் நடைபெற்றது. தற்போது இரண்டாம் கட்டம் சென்னையில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், திடீரென்று சில தினங்களுக்கு முன்னர் இணையத்தளங்களில் அப்படத்தின் கதை வெளியானது. அதாவது, வெளிநாட்டு உளவாளியான வில்லன் தோட்டாராய் சௌத்ரி, கொல்கத்தாவில் குண்டு வெடிப்பு நிகழ்த்தவிருக்கும் செய்தி அறிந்த கொல்கத்தா பொலிஸ், விஜய்யின் உதவியை நாடுமாம். அதையடுத்து விஜய் களத்தில் இறங்கி வில்லனை பிடித்து குண்டு வெடிப்பு நிகழாத வண்ணம் காப்பாற்றுவாராம்.

ஆனால், அதன்பிறகு சிறையில் இருந்து தப்பித்து வெளியே வரும் வில்லன், விஜய்யை பழிவாங்க சென்னை வருவாராம். ஆனால் அங்கே அவர் சந்திக்கும் விஜய் அவரைப்போன்ற உருவில் இருக்கும் வேறு விஜய்யாம். அதையடுத்து தன்னை பொலிசில் பிடித்துக்கொடுத்த விஜய்யை அவர் எப்படி கண்டு பிடிக்கிறார். அதை விஜய் எப்படி முறியடிக்கிறார் என்பதுதான் மீதிக்கதையாம். ஆனால், இந்த கதை வெளியானதில் இருந்து குழப்பத்தில் இருக் கிறாராம் ஏ.ஆர்.முருகதாஸ்.

ஏ.ஆர் முருகதாஸ் - விஜய் படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடைபெற்று வருகிறது. விஜய்க்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார். அனிருத் இசையமைக்கிறார். 'துப்பாக்கி' படத்துக்குப் பிறகு மீண்டும் இணைந்த கூட்டணி என்பதாலும், விஜய்க்கு இது 57ஆவது படம் என் பதாலும் படத்தின் மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

படத்தின் பட்ஜெட் 100 கோடியைத்தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படத்தில் நடிக்க விஜய்க்கு 22 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதாம். இயக்குநர் ஏ. ஆர். முருகதாஸ் 18 கோடி சம்பளம் வாங்குகிறாராம்.

## 18 கோடி

# கஜால் கருத்தால்

சினிமாவிலிருந்து ஸ்ரேயா ஓய்வு பெறட் கஜால் கூறிய கருத்தால் பரபரப்பு ஏற்பட்டுள் அகர்வால், விஜய்க்கு ஜோடியாக ஜில்ல நடித்தார்.

இந்த நிலையில் சமீபத்தில் ஊடகம் பேட்டியளித்த கஜாலிடம், தமிழ் சினிமாவில் நடிகையாக இருந்த ஒருவர் தற்போது





சரு

# அப்பாவின் மிதிவண்டி

## சினி விமர்சனம்

போராலும்,தொழினுட்பவசதிகளின்மையாலும் தேக்க நிலையில் இருந்த ஈழத்து தமிழ் சினிமாவின் உடைப்பு குறும்படங்களின் மூலம் பெரும்பாய்ச்சலாக நிகழத்தொடங்கியிருக்கிறது. தினமும் இலங்கையின் வெவ்வேறு பாகங்களில் இருந்தும் தமிழ்மொழி மூலமான குறும்படங்கள் வந்தபடியே உள்ளன. இந்தவரிசையில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட படம்தான் 'அப்பாவின் மிதிவண்டி'. சிறுவயதில் இருந்தே சவரிக்கு சைக்கிள் மீது கொள்ளைப்பிரியம். அவனும் சைக்கிளுமாகப் பொழுதுகள் கழிகின்றன. தன்னை விடவும் அதிகமாக சைக்கிளையே கரிசனையோடு கவனிக்கிறான். அவனின் உற்ற நண்பன் அந்தச் சைக்கிள்தான். இந்த நிலையில் சவரி வளர்ந்து இளைஞனாகின்றான். காளையானவுடன் அவனுக்கு காதலும் வருகிறது. ஆனால், கிறிஸ்தவனான சவரி, இந்துப் பெண்ணைக் காதலித்ததால் சிக்கல் வருகிறது. காதலர்கள் இருவரும் ஓடிப்போக முடிவெடுக்கிறார்கள். காதலியின் அண்ணன்கள் துரத்த அவர்களை அடித்து வீழ்த்திவிட்டு , காதல் ஜோடி சைக்கிளில் பறக்கிறது. பின்னர் அவர்களின் வாழ்க்கையில் வசந்தம் வீசுகிறது. குடும்பம், குழந்தைகள் என்று சந்தோசமாக வாழ்கிறார் சவரி.

காலம் மாறுகிறது. சவரியின் பிள்ளைகள் தங்கள் அப்பாவின் பழைய சைக்கிளை விற்றுவிட்டு,அதற்குப் பதிலாக மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுக்க நினைக்கிறார்கள். ஆனால் சவரி அதற்கு மறுக்கிறார். இருப்பினும் ஒருநாள் காலை வீட்டில் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று நிற்கிறது. சவரியின் பழைய சைக்கிளைக் காணவில்லை. பிள்ளைகள் தாங்கள் நினைத்தபடி சைக்கிளை விற்றுவிட்டு, மோட்டார் சைக்கிள் வாங்கியதை மனைவி சவரிக்கு சொல்கிறாள்.

சவரி உடைந்து போகிறார். சிறுபிள்ளை போல தேம்பி அழுகிறார். அவரது நண்பர்கள் தேறுதல் சொன்னபோதும் சவரியின் மனவேதனை ஆறவில்லை. கவலையோடு உட்கார்ந்திருக்கும் சவரியின் முன்னால்,அவரது சைக்கிளை ஓட்டியபடி வருகிறான் ஒரு இளைஞன். சைக்கிளை விட்டுவிட்டு அவன் மாடுகளைப்பார்க்க அவன் வயலுக்கு செல்ல, தன் சைக்கிளைக் கண்ட சவரி அதை வாஞ்சையோடு தடவுகிறார். ஆனால் அது சவரியின் சைக்கிள் என்பதை அறியாத அந்த இளைஞன் "ஐயாவுக்கு சைக்கிள் பிடிச்சிருக்கு போல. வாங்கப் போறியளோ?" என்று கேட்டுவிட்டு , சைக்கிளோடு புறப்படுகிறான். அவன் போகையில் விக்கித்த குரலில் "தம்பி... அது என்ரையடா" என்று சவரி சொல்வதோடு முடிகிறது படம்.

ஜே.ம. ஜோசப்பின் எழுத்து மற்றும் இயக்கத்தில் உருவான இந்துப் படத்துக்கு, சங்கர் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். கேதீஸ் இசையமைத்திருக்கிறார். மண்வாசனையோடு கூடிய கருவைக் கையில் எடுத்திருக்கிறார்கள். வழக்கமாக தென்னிந்திய சினிமாப் பாணியிலான காதல் காட்சிகள், உரையாடல்கள் என்பவற்றை தவிர்த்தமைக்காக படக்குழுவுக்கு ஒருபாராட்டு

5 நிமிடங்களில் சொல்லவேண்டிய கதை. ஆனால் ஏனோ 30 நிமிடங்கள் நீள்கிறது. படத்தின் மையக் கதையோட்டத்துக்கு நகைச்சுவை என்ற பெயரில் இணைக்கப்பட்ட காட்சிகள் இடையூறாக இருக்கின்றன. அதிலும் முர்த்தி என்ற பாத்திரத்தை ஏற்றவர் அடிக்கடி முகத்தை அடிக்கடி அஷ்டகோணலாக்கி உரையாடுவதையே நகைச்சுவை என்று நம்பி நடித்திருக்கிறார். சவரிக்கும் சைக்கிளுக்கும் இடையிலான உறவு நிலையை இன்னும் ஆழமாகச் சொல்லியிருக்கலாம். தனியே சைக்கிள் ஓட்டிப் பழகுவதும்,காதலியைக்கைபிடிக்கவும் மட்டுமே சைக்கிள் வருவதால் அதன் மீதான சவரியின் பாசம் வெளிப்படத் தவறிவிடுகின்றது. படம் நெடுகிலும் அந்தச் சைக்கிள் வந்தாலும் ஏனோ பார்வையாளர்களோடு ஒட்ட மறுக்கிறது.

படத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் வரும் "வண்டி வண்டி மிதிவண்டி" பாடல் நன்றாக இருந்தாலும் அதைக் கேட்கும் போதே "ஊருக்குள்ள சக்கரவர்த்தி ஆனால் உள்ளுக் குள்ள மெழுகுவர்த்தி" என்ற இளையராஜாவின் இசையில் வெளிவந்த பணக்காரன் படப்பாடல் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை. (பாடல்கள் குறும்படங்களுக்கு அவசியமற்றவை என்பது பலருக்கும் தெரிவதில்லை) நடிப்பிலும் ஒருவித நாடகத்தனம் எல்லா நடிகர்களிடமும் வெளிப்படுகின்றது.

என்றாலும் முதல் முயற்சி என்ற வகையில் இயக்குநர் ஆரோக்கியமான சினிமாத்தளத்தில் பயணிக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. படத்துக்கு ஒளிப்பதிவு பலம். அதிலும் வண்டிலில் நாயகி பயணிப்பதும், சைக்கிளுக்கு பதிலாக மோட்டார் சைக்கிளை சவரி காண்கையிலும் ஒளிப்பதிவு கவிதை போல நகர்கிறது. இன்னும் தொடர்ச்சியான பயணத்தின் மூலம் சிறந்த படைப்புகளை வழங்க முடியும் என்ற நம்பிக்கையை அப்பாவின் மிதிவண்டி படக்குழுவினர் தந்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஸ்ரேயா அதிர்ச்சி

...ட்டும் என்று ...ள்ளது.காஜல் ...லா படத்தில் ...ம் ஒன்றுக்கு ...ல் முன்னணி ... ஒய்வு பெற

வேண்டும் என்றால் யார் பெயரை சொல்வீர்கள்? என்றதற்கு உடனடியாக ஸ்ரேயா பெயரைக் குறிப் பிட்டுள்ளாராம்.


இந்த பதிலானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ரஜினி, விஜய் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் நடித்திருக்கும் ஸ்ரேயா, கஜாலின் கருத்தால் அதிர்ச்சியடைந்துள்ளா ராம்.

## பிரபுதேவா – முருகதாஸ் மோதல்

ஹொலிவுட்டில் பிரபு தேவா மற்றும் ஏ.ஆர்.முருகதாஸ் படங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. பிரபுதேவா இயக்கத்தில் அஜய் தேவ்கன் ஹீரோ வாக நடிக்கும் ஹிந்தி படம் 'ஆக்‌ஷன் ஜாக்சன்'.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் அக்‌ஷய் குமார் ஹீரோவாக நடிக்கும் படம் 'ஹாலிடே' (துப்பாக்கி படரீ-மேக்). இந்த இரண்டு படங்களையும் ஜூன் 6ஆம் திகதி வெளியிட திட்ட மிட்டுள்ளனர் அதன் தயாரிப்பாளர்கள். ஆனால் இந்த இரண்டு படங்களும் ஒரே தினம் வெளியாவது அஜய் தேவ்க னும், அக்‌ஷய குமாரும் விரும்பவில் லையாம். ஆனால் படத்தின் தயாரிப் பாளர்கள் தங்களது வெளியீட்டுத் திகதி யில் பிடிவாதமாக இருக்கிறார்களாம்.





## பாலா இயக்கத்தில் ஸ்ரேயா



இயக்குநர் பாலா வின் படங்களில் நடித்த விக்ரம், சூர்யா, ஆர்யா, விஷால, அதர்வா போன்ற பல நடிகர்கள் அங்கீகரிக்கப்பட்ட நடி கர்களாக மாறினர். அதேசமயம் பாலாவின் படங்களில் நடித்த பல கதாநாயகிகள் சினிமாவில் ஜொலிக்க வில்லை. சேது படத்தில் அறிமுகமான அபிதா அதன் பிறகு இரண் டொரு படங்களில் நடித்த பின்னர் சின்னத்திரைக்கு சென்றுவிட்டார். அதே போல், பிதாமகனில் நடித்த சங்கீதா - லைலா ஆகிய இருவருக்கும் அதன்பிறகு படம் இல்லாமல் திருமணம் செய்துகொண்டனர்.

நான் கடவுளில் நடித்த பூஜாவுக்கும் பட வாய்ப்புக் கள் பெரிதாக வரவில்லை. அத்துடன் அவன் இவ னில் ஜனனி அய்யர், மது ஷாலினி ஆகிய இருவ ரும் நடித்தனர். இவர்களில் மது ஷாலினியை அதன்பிறகு காணவில்லை. ஜனனி அய்யர் மட்டும் கஷ்டப்பட்டு தாக் குப்பிடித்து வருகிறார். அதேபோல், பரதேசியில் நடித்த வேதி காவுக்கும் பெரிய அளவில் எதிர்காலம் இருப்பதாகத் தெரிய வில்லை.

இதனால் தற்போது பாலா இயக்கவிருக்கும் படத்தில் நடிக்க, முன்னணி நடிகைகளைத் தொடர்பு கொண்டபோது யாருமே சிக்கவில்லையாம். இதனால்தான், படமே இல்லாமல் பரிதவித்துக்கொண்டிருந்த ஸ்ரேயாவை தட்டி எழுப்பியுள் ளார்களாம். படத்துக்கு கதாநாயகியாக வரும் ஸ்ரேயாவை பாலா தூக்கி நிறுத்துவாரா அல்லது அவரையும் வீட்டுக்கு அனுப்புவாரா என்பதை படம் வெளியாகிய பின்பு அறிந்து கொள்ளலாம்.

## ஆண்ட்ரியாவின் பாடலும் இசையு...



நடிகை ஆண்ட்ரியா தற்போது நடித்து வரும் 'தரமணி' படத்தில் ஒரு பாடலை எழுதி, அதற்கு இசையும் அமைத்து அவரே பாடியுமுள்ளாராம். சிறந்த பின்னணி பாடகி, நடிகை என பிர-பலமான வர் ஆண்ட்ரியா. அப்போது, காதல் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ளும் இவர், தற்போது இயக்குநர் ராமின் இயக்கத்தில் தரமணி என்ற படத்தில் நடித்து வருகி றார். இந்த படத்திற்கான பாடல் ஒன்றை அவரே எழுதி, இசையமைத்துப் பாடி கலக்கியிருக்கிறாராம். ஆண்ட்ரியாவின் பாடலை 'சோங் ஆப் தரமணி' என புகழ்கிறார் இயக்குநர் ராம்.

ராம் இயக்கத்தில், ஜே. எஸ்.கே பிலிம் நிறுவனம் சார்பில் ஜே.சத்தீஷ் குமார் தயாரிப்பில் உருவாகும் படம் 'தரமணி'. இதில் நாயக னாக வசந்த் ரவி என்ற புது முகம் நடிக்கிறார். நாயகி யாக ஆண்ட்ரியா நடிக்கிறார். இந்தபடத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இப்படத்திற்காக, 'தி சோல் ஆப் தரமணி' என்ற ஒரு பாடலை நடிகை ஆண்ட்ரியா எழுதி இசையமைத்துப் பாடியுள்ளார்.

குறித்த படத்தின் விளம்பரப்படுத் தலுக்காக பயன்படுத்தப்படும் இந்த பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

இதில் நடிகர் கமல் ஹாசன், இயக்குநர் பாரதிராஜா ஆகியோர் கலந்துகொண்டு பாடலை வெளியிட் டனர்.

## 'வாலு'வின் தாமதத்துக்கு நான் காரணம் இல்ல...

சிம்பு, ஹன்சிகா நடிக்கும் வாலு படம் இரண்டு வருடமாக தயாரிப்பில் இருக்கிறது. இயக்குநர் விஜய் சந்தரும் முட்டி மோதிப் பார்த்தும் படத்தை முடிக்க முடியவில்லை. சமீபத்தில் இரண்டு முறை ஹைதராபாத்தில் படப்பிடிப்புக்கு ஏற்பாடு செய்தும் சிம்பு வந்தால் ஹன்சிகா வராமலும், ஹன்சிகா வந்தால் சிம்பு வராமலும் படப்பிடிப்புகள் நிறுத்தப்பட்டது. தயாரிப்பாளர் நிக் ஆர்ட்ஸ் சக்ரவர்த்தி பெரும் கவலையில் இருக்கிறார். படத்தின் தாமதத்துக்கு நான் காரணமில்லை என்று அவரவர் சொல்லிக்கொள்கிறார்கள். இப்போது ஹன்சிகா நான் காரணம் இல்லை என்று தன் பங்குக்கு சொல்லிவிட்டார்

அவர் கூறியிருப்பதாவது, "வாலு படத்தில என்னுடை... திறமையான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறன். எ... னால் எந்தப் படமும் தாமதம் ஆகவில்லை. வாலு தாம... துக்கு யார் காரணம் என்று தெரியாது. சமீபத்தில்கூ... ஹைத ராபாத்தில் படப்பிடிப்பு வைத்திருக்கின்றோ... வாருங்கள் என்றார்கள். அடுத்த நொடியே அங்... போனேன் ஆனால் படப்பிடிப்பு நடக்கவில்லை. அதுக்... காரணம் எனக்குத் தெரியாது. எத்தனையோ மு... இயக்குநருக்கு அழைப்புக்களை மேற்கொண்டு படப்பிடி... தொடருமாறு வேண்டினேன். அவரிடமிருந்து எந்... பதிலும் வரவில்லை. எனவே வாலு தாமத்துக்கு நான் எ... விதத்திலும் காரணம் இல்லை" என்கிறார் ஹன்சிகா.

## சிறந்த நடிகை விருது

வாரணம் ஆயிரம், குத்து உள்ளிட்ட பல படங்களில் நடித்த ரம்யா நடிப்புக்கு முழுக்குபோட முடிவு செய்திருக்கிறார். பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக அரசின் சிறந்த கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்ட ரம்யா, 'சஞ்சு வெட்ஸ் கீதா' என்ற படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகை விருது பெற்றார்.

"ஒவ்வொரு வருடம் விருது அறிவிப்பதற்கு முன்பும் நான் சிறந்த நடிகை விருது பெறுவேன் என்று என் தந்தை நம்பிக்கையாக இருப்பார். ஆனால் அது நழுவிப் போய்க்கொண்டே இருந்தது. அவரது ஆசை அவர் மறைவுக்கு பிறகுதான் நடந்திருக்கிறது. தற்போது அந்த விருது கிடைத்திருக்கிறது. நான் விருது பெறும் இந்தக்காட்சியை அவர் பார்க்க முடியவில்லையே என்பதை எண்ணிக் கவலையடைகின்றேன்.

எதிர்காலத்தில் இன்னொரு முறை சிறந்த நடிகை விருது பெறுவேனா என்பது எனக்கு தெரியவில்லை. ஏனென்றால் நடிப்புக்காக இதுதான் நான் பெறும் முதல் மற்றும் கடைசி விருது. இதை எனது தந்தைக்கு அர்ப்பணம் செய்கிறேன் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது ஓர் அழகிய நிலாக்காலம்



ஒளிப்படம் : பவி

## 3 கிராமங்களின் கதை

நிலம் 04

மகாலிங்கம் பத்மநாபன்

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலும் மீசாலை, கச்சாய், சாவகச்சேரி போன்ற ஊர்களிலிருந்து கடல்வழியாகச் சுட்ட தீவு ஊடாக வந்து குடியேறியவர்களின் வழித் தோன்றல்கள் தான். போக்குவரத்துக்கு வள்ளங்களையும், எருதுகளால் இழுக்கப்பட்ட வண்டில் களையும் பிரதானமாகப் பாவித்தனர். இவர் களில் ஒரு பகுதியினர் நெற்செய்கை, பசு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு என்பவற்றுக்காகவும் இன்னொரு பிரிவினர் மீன்பிடி, கருவாடு போடுதல் போன்ற தொழில்களை நாடியும் இந்த ஊர்களுக்கு வந்தனர்.

இந்த மக்கள் குடியேறத் தொடங்க முன்னர் இந்தியாவின் கேரளாவிலிருந்து வந்த பணிக்கர்கள் எனும் மலையாள மொழி பேசுவோர் இங்கு தங்கி யானைகளைப் பிடித்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தனர். அவர்கள் தமது நாட்டிலுள்ள கண்ணகை அம்மனை இங்கு தருவித்து வணங்கிய பின்னரே யானைகளுக்குப் பொறி வைத்துப் பிடிப்பார்கள். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அம்மனே பொறிக் கடவை அம்மன் என இன்று வரை போற்றப்படும் அம்மன்கோயில் ஆகும். நேர்த்தியின் பின் அவர்கள் வைத்த பொறியில் பவளக் கொம்பன், முத்துக் கொம்பன் போன்ற விலை மதிப்பற்ற யானைகள் வந்து விழுந்தன. இப்படி பொறிவைப்பதற்காக அருள் புரிந்த அம்மன் என்பதாலேயே பணிக்கர்கள் வழிபட்ட அம்மனுக்கும் பொறிக்கடவை அம்மன் என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது.

இப்படி யானை பிடிக்க வந்த பணிக்கர்களில் ஓரிருவர் கிளிநொச்சிப் பெண்களை மணந்து இங்கேயே தங்கிவிட்டனர். ஏனையவர்கள் இந்தியா திரும்பி விட்டனர்.பணிக்கர்களின் பின்னர் கச்சாய்ப் பகுதியிலிருந்து வந்த மக்கள் அம்மனை ஆதரிக்கத் தொடங்கினர்.

பின்னர் குஞ்சுப்பரந்தன் உடையார் குடும்பத்தினரிடம் ஆலய நிர்வாகம் சென்றது. நீண்டகாலம் இவர்களின் நிர்வாகத்திலேயே இயங்கிய கோவில் காலப்போக்கில் குஞ்சுப்பரந்தன், பெரிய பரந்தன், செருக்கன் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அறங்காவல் சபையினரின் நிர்வாகத்தின் கீழ் வந்தது.

உருத்திரபுரம் குடியேற்றத் திட்டம் ஏற்படுமுன்னர் 8ஆம் வாய்க்கால், 10ஆம் வாய்க்கால் நீரை பெரிய பரந்தன், குஞ்சுபரந்தன் மக்களே அனுபவித்தனர். இதனால் இந்தக் கிராமங்களில் முப்போகமும் நெல் செய்கை பண்ணப்பட்டது.

8ஆம் வாய்க்கால், 10ஆம் வாய்க்கால் உருத்திரபுரம் குடியேற்றத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படத் தொடங்கியதும் அந்த இரு வாய்க்கால்களினதும் ஏகபோக உரிமை இந்தக் கிராம மக்களுக்கு இல்லாது போயிற்று. 1964ஆம் ஆண்டு கடல்நீர் பெருக்கெடுத்து ஊருக்குள் நுழைந்தது. இதனால் நூறு ஆண்டுகளுக்கு மேல் செய்கை பண்ணப்பட்ட பொன் கொழிக்கும் பூமி உவர் நிலமாக மாறியது.

நீலனாறு, கொல்லனாறு போன்றவற்றை தூய்மைப்படுத்தி ஆழப்படுத்துவதன் மூலம் இந்த உவர் தன்மையை இல்லாது போக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நீர் தட்டுப்பாட்டுடன் எருமைகளின் தேவையும் குன்றியது. அகப்பட்ட விலைக்கு விவசாயிகள் எருமைகளை விற்றனர். ஓரிருவர் தமது எருமைகளைக் காப்பாற்ற ஸ்கந்தபுரம், கோணாவில், முறிப்பு, அக்கராயன் குளம், வன்னேரி என இடம்பெயர்ந்தனர்.

உழவு இயந்திரங்களின் வரவுடன் எருமைகளின் தேவை முற்றாக இல்லாது போயிற்று. அத்தோடு விவசாயிகளிடையே காணப்பட்ட அன்பு, பாசம், நட்பு, விட்டுக் கொடுத்தல், கூட்டுறவுப் பண்பாடு யாவும் அற்றுப் போயின. ஓர் இயந்திரத்தனமாக வாழ்வு இங்கு ஆரம்பமாகியது.

எனினும் பொறிக்கடவை அம்மன் மட்டும் இந்தமக்களை இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். இந்தக்கிராம மக்கள் தீபாவளி, புதுவருடத்தை விட அம்மனின் பங்குனி வேள்வியையே பிரதானமாகக் கொண்டாடுவர். புத்தாடை அணிந்து காவடி, பாற்செம்பு எடுத்து மிகக் குதூகலமாகக் கொண்டாடுவர். உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பங்குனி வேள்விக்கு ஊருக்கு வந்து விடுவர்.

**(இன்னும் நிலம் விரியும்)**

# தவக்கைக்கு பயம்

கனலுபன்

'பங்' சின்னவனா இருக்கேக்க பள்ளிக்கூட லீவுக்கு அம்மம்மா வீட்ட கனகாலத்துக்குப் பிறகு போயிருந்தான்.

ஒரு நாள் தானே கிணத்தில தண்ணி அள்ளியாரன் எண்டு வாளியை எடுத்துக் கொண்டு போனான்.



அள்ளேக்குதான் பாத்தான், கிணத்துக்குள்ள ஏதோ பெரிசா அசைஞ்சிச்சு!

ஒரு சோடி கண்கள் உள்ளுக்கிருந்து அவன உத்துப் பாத்திச்சு!

'பங்'க்கு முள்ளந்தண்டு சில்லிட்டிச்சு!

"என்ர அம்மா!! ஐயோ!!"

வாளியைக் கிணத்துக்குள்ள போட்டுட்டு விழுந்தடிச்சு ஓடியந்தான்; விசயத்தைச் சொன்னான்!

அம்மம்மா சிரிச்சுப் போட்டுச் சொன்னா.

"அடேய் உன்ர பெத்தப்பு மலாயன் பெஞ்சனியராடா... அந்த மனுசன் அங்கயிருந்து வரேக்க கொண்டர ஒண்டுமில்லாம போயும் போயும் அங்கத்தையான் இராட்சத தவக்கைக் குஞ்சுகள் கொண்ணந்தவர். அதுகள் வளந்து, கொஞ்சம் பெருகி, சிலது செத்து இப்ப இதான் கடைசியா மிஞ்சி நிக்குது!"

'பங்' இன்னுமும் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தான்.

"எனக்குச் சரியான பயமாப் போச்சு!" - திக்கிச் சொன்னான்.

"அப்பிடி இல்லயடா, நீ செய்த வேலையால உன்னை விட தவக்கைதான் சரியாப் பயந்திருக்கும்!"



கடைசி வரிகள் காதை அடைந்ததும் 'பங்' மலர்ந்தான்.

"அம்மம்மா, அப்ப நான் தண்ணி எடுக்காம வந்தது பிரச்சினை இல்லை நீங்களும் அதுக்குக் கவலைப்படத் தேவையில்லை!"

அம்மம்மா முழுச, 'பங்' வலு சந்தோசமா விளக்கினான்.

"நீங்க சொல்லுற மாதிரி, அந்தப் பேத்தைத் தவக்கையும் என்னளவுக்குப் பயப்பிட்டிருக்கும் எண்டா... எனி நாங்க அந்தத் தண்ணியக் குடிக்கேலாது!"

அம்மம்மா அப்பதான் அவனப் பாத்தா. 'பங்'கின்ர காச்சட்டையும் காலும் ஈரமாக் கிடந்தது.

**(நன்றி - கதை சொல்லடா தமிழா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூந்தல் என்பது பெண்களுக்கு அழகைக் கொடுத்தாலும் எல்லோருடைய கூந்தலும் ஒரே தன்மையானது கிடையாது. பொதுவாக பெண்களின் கூந்தலை மூன்று விதமாக பிரிக்கலாம்.

1. வறண்ட கூந்தல்,

# நீங்கள் கூந்தலழகியாகிட......!

2. எண்ணெய்த்தன்மையான கூந்தல்,

3. சராசரியான தன்மை கொண்ட கூந்தல்

வறண்ட கூந்தல் உள்ளவர்கள் முடியைப் பராமரிப்பதில் கவனமாக இருக்கவேண்டும். எளிதில் உடைந்துவிடக்கூடிய இத்தகைய தலை முடி தேங்காய்ப்பாலை தேய்த்து முழுகினால் உறுதியானதாக மாறும்.

இரண்டாவது வகுப்பினரான எண்ணெய்த்தன்மையான கூந்தலையுடையவர்கள் சற்று அதிகமாக கவனம் செலுத்தவேண்டும். இவர்களின் கூந்தலில் இலேசாக அழுக்குகள் படியக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால் இவர்கள் தினமும் கூந்தலை அலசவேண்டும். நிறைய நீர் அருந்தவேண்டும்.

சராசரியான கூந்தலுடையவர்கள் தினமும் தலைக்கு தேங்காயெண்ணெய் அல்லது பொருத்தமான எண்ணெய் பயன்படுத்தவேண்டும். பத்துநாள்களுக்கு ஒருமுறை செவ்வரத்த மிலையைத் தேய்த்து முழுகினால் நல்லது.

இவ்வாறான முறைகளை முயன்று பாருங்கள். உங்கள் கூந்தல் எத்தகைய தன்மையானதாக இருந்தாலும் மற்றவர்களைக் கவரும் வகையில் அழகாக மாறிவிடும். கருகரு கூந்தல் உங்களதாகிவிடும்.



# சாதிக்கத் துடிக்கும் பெண்களுக்கு..!

தொகுப்பு: ஸ்ருதி

**ஒரு பெண் தன்னுடைய வாழ்வை வெற்றிகரமான சாதனை மிக்க தொன்றாக மாற்றிக் கொள்வதற்கு சில படிக்கற்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் போன வாரம் பகிர்ந்திருந்தோம். அதன் தொடர்ச்சியாக மிகுதிப் படிக்கற்களை இந்த வாரம் பார்ப்போம்.**

**பகுதி-02**

**வாழ்க்கை முழுதும் மற்றவர்கள் உங்களை மதிக்கவேண்டுமென்றால் நீங்கள் மற்றவர் களை மதிக்க வேண் டும்.**

* மற்றவர்களிடத்தில் அன்பாகவும் மதிப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய நடவடிக்கை தான் மற்றவர்கள் உங்களினுடைய சொற்களைச் செவிமடுக்கவும் உங் களை மற்றவர்கள் முன்மாதிரியாகக் கொள்ளவும் வழி செய்யும்.

* **பெற்றவர்களுக்கு மதிப்பளியுங்கள்.**

உங்களின் வாழ்வில் மிகமுக்கியமான நபர்கள் உங்கள் பெற்றோர் தான். உங்களுடைய தேவைகளை முற்று முழுதாக நிறைவுசெய்ய முடியாத நிலைமையில் அவர்கள் காணப்பட்டாலும் கூட அவர்கள் உங்கள் பெற்றோரே. அவர்களின்றி இவ்வுலகில் நீங்கள் அவத ரித்திருக்க முடியாது. ஆதலால் எந்தச் சந்தர்ப்பத்திலும் பெற்றோருக்கு மதிப்பளியுங்கள்.

* **மற்றவர்களுக்காக உங்களால் முடிந்தவற்றை முழுமையாகச் செய்யுங்கள்.**

மற்றவர்கள் ஏதாவது பிரச்சினையான நிலைமையில் இருக்கும் போது உங்களால் அதைச் சரிசெய்ய முடியும் என்று நினைத்து உங்களிடம் அந்தப்பிரச்சினையை சீர் செய்வதற்காக வந்தால், அதை அவதானமாகக் கேட்டு உங்களால் முடிந்தவரை நேர்த்தியாகவும் மனதுக்கு நிறைவாகவும் செயற்பட முன் வாருங்கள்.

* **சிக்கலான நிலைமைகளை மனத் துணிவு டன் கடந்துவாருங்கள்.**

வாழ்வில் எல்லோருக்கும் எல்லாம் நினைத்தபடி நடப்பதில்லை. திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு அப் பாலும் சில சந்தர்ப்பங்கள் கை மீறிப் போகின்றன. எனினும் அத் தகைய சந்தர்ப்பத்தில் மனமுடைந்து விடாமல் மீண்டு வர வேண்டும். பிரச்சினைகள் இல்லாமல் இவ்வுலகில் எவரும் இல்லை. ஆனால் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கி விடாமல் அதை ஒரு தடையாகக் கருதாமல் சவாலாகக் கருதி கடந்துவரக் கூடிய தைரியத்தை உருவாக்கி கொள்ளவேண்டும்.

# பல்கலை விடுதியருகே ஆபாச ஆசாமி



"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற மன நிலையில் நான் இருப்பதால் எல்லாக் கோயில்களுக்கும் செல்வது என்னுடைய வழமை. வெள்ளிக் கிழமைகளில் இந்துக் கோயிலுக்கும் ஞாயிற்றுக் கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலயத்துக்கும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் செல்வேன். அதேபோன்றே தான் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பகுதியில் வேலைநிமித்தம் நின்றிருந்ததால் அருகிலிருந்த பல்கலைக்கழக நல்லாயன் தேவாலயத்துக்குச் செல்லலாம் என்று நினைத்து மோட்டார்சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

இராமநாதன் வீதிக்கு குறுக்காக பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு அருகாக செல்கின்ற ரயில் பாதையால் மோட்டார்சைக்கிளை ஆலயப்பக்கமாகத் திருப்பினேன். ஒரு இருபது மீற்றர் சென்றிருப்பேன். ஏழெட்டு இளைஞர்கள் ஆணொருவரைக் குழுவாகப் பந்தாடிக்கொண்டிருந்தார்கள். என்னால் அதைப் பார்த்துக்கொண்டே அப்பால் செல்ல முடியவில்லை. 'இப்படியா ஒரு நபரை இரக்கமில்லாமல் அடிப்பது..?' இறங்கி என்ன விடயம் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அளித்த பதிலுக்குப் பின்னர் அடிவாங்கிக் கொண்டிருந்தவருக்காக என்னால் இரங்கமுடியவில்லை.

### அப்படி என்னதான் அந்த அடிவாங்கியவர் செய்தார்.....?

பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் உள்ள அடுக்குமாடிக்கட்டடங்கள் ரயில்பாதைக்கு அருகாகவே காணப்படுகின்றன. எனினும் ரயில்பாதை உள்ள பகுதி பற்றைக்காடாக உள்ளதால் இரும்புக்கழிவுகள் அங்கே வீசப்படுகின்றன. இரும்பு பொறுக்குகின்ற சாக்கில் இந்தப்பகுதிக்கு வரும் சில ஆசாமிகள், கீழே நின்றபடி விடுதியின் மேல் தளத்தில் உள்ள மாணவிகளுக்கு ஆபாசமான சைகைகளைக் காட்டுவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

அதே போன்றே கடந்த ஞாயிறுக்கிழமையும் மதிய நேரம் அந்த ஆசாமி குறிப்பிட்ட பற்றைப்பகுதியிலிருந்து விடுதியின் இறுதிப்பகுதியிலிருந்த கட்டடத்திலுள்ள சிங்கள மாணவிகளை பலமாகச் சத்தமிட்டு அழைத்து அருவருப்பான சைகைகளைக் காட்டியிருக்கிறார். என்ன செய்வது என்று தெரியாமல் அந்த மாணவிகள் உடனடியாக இறுதிவருட மாணவிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். அவர் 'ஆபாச ஆசாமி' பற்றி தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு தொலை பேசியூடாகத் தகவல் சொல்ல, ஆண்கள் விடுதியில் இருந்து விரைந்து வந்தனர் மாணவர்கள்.

ஆண்களைக் கண்டவுடனேயே இந்த 'ஆபாச ஆசாமி' பற்றைக்குள்ளிருந்து இரும்புபொறுக்க வந்தவர் போல மெதுவாக வெளியேற முயன்றிருக்கிறார். ஆனால் அவருடைய சைக்கிள் பற்றைக்குள் நிலத்தோடு பக்கவாட்டாக ஒளிக்கப்பட்டிருந்திருக்கிறது. அதன்பின்னர் மாணவர்கள் அவரைப் பல்கலைக்கழக வளாகத்தினுள் கொண்டு சென்று கட்டிவைத்து முறையாகக் கவனித்துள்ளனர்.

முன்னரும் இதே போன்ற ஒரு சம்பவம் குறிப்பிட்ட பகுதியில் நடைபெற்றதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மற்றவர்கள் எப்படியும் இருந்துவிட்டுப்போகட்டும் என்கின்ற மனோ நிலையில் இருக்காதீர்கள் சகோதரிகளே..! சமூகம் எங்களினுடையது அதைப்பாதுகாக்கின்ற பொறுப்பும் எங்களிடம் இருக்கின்றது. இத்தகைய சம்பவங்களைச் சமூக நன்மதிப்புக் காரணமாக மறைத்து வைத்தால், அது தொடரவே செய்யும். இதனால் மேலும் பல பெண்கள் பாதிக்கப்படக்கூடும். எனவே அக்கிரமங்களைத் துணிச்சலோடு வெளிக் கொணர்ந்து, அவற்றைக் கருவிலேயே வேரறுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔண்யன்

சந்திலே சிந்து பாடிவிடக்கூடிய யூலியனுக்கு தன் தாயாரோடு உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தால் புகுந்து விளையாடாமல் இருப்பானா? சிறைக்குள் தவிக்கும் மகனையும் அவன் பிரிவால் துயருறும் ஒரு தாயையும் உரையாட வைத்துப் பெரும் புண்ணியத்தைச் சம்பாதித்து விட்டதாக சிறையதிகாரிகள் அன்றைக்கு நிம்மதியாக உறங்கினர். சிலசமயங்களில் அவர்களது கனவில் கடவுளர்கள் வந்து, மலர்மாரி சொரிந்துமிருக்கலாம். ஆனால் எல்லாக் கனவுகளும் அடுத்தநாள் காலையோடு கலைந்தன.

"நான் குற்றமற்றவன். அமெரிக்க அதிகார வெறிக்கு பயந்தே சுவீடன் என் மீது திட்டமிட்ட வகையில் இந்த வழக்கைச் சோடித்துள்ளது. என்னை சுவீடனுக்கு நாடு கடத்தி அங்கு பாலியல் குற்றம் பற்றி விசாரிக்காமல் அமெரிக்க ரகசியங்களை ஏன் வெளியிட்டாய்? என்றுதான் கேட்கப்போகிறார்கள். உலகம் என்னை மறந்ததும், காதும் காதும் வைத்தது போன்று சுவீடன் என்னை அமெரிக்காவுக்கு நாடு கடத்திவிடும். பின்னர் அவர்கள் விரும்பியபடி சித்திரவதை செய்யலாம். கொல்லலாம். விக்கிலீக்ஸை முடக்கலாம். இதற்காகவே ஆதாரமின்றி, பழிவாங்கும் நோக்கோடும் இந்த வழக்கு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன" என்ற யூலியனின் அறிக்கை எல்லா ஊடகங்களையும் அடுத்தநாள் நிறைத்தது.

"சிறைக்குள் இருக்கும் யூலியன் எப்படி இந்த அறிக்கையை எங்களுக்குத் தெரியாமல் ஊடகங்களுக்கு சொல்ல முடிந்தது. அவனைத்தான் எந்தவித தொடர்புகளுமற்ற தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறோமே?" என்று பிரிட்டன் அரசு குழம்பியது. விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. அந்த விசார்ணைகளின் முடிவில், தன் தாய் மூலமே யூலியன் குறித்த அறிக்கையை வெளியிட்ட விடயம் தெரியவந்தது. அன்றைக்கே சிறையில் இருந்த அதிகாரிகள் தண்ணியில்லாக் காட்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

யூலியன் விடுத்த அறிக்கைக்கு நல்ல பலன் கிடைத்தது. அமெரிக்கத் தலையீட்டை எதிர்த்த நாடுகளெல்லாம் யூலியனுக்கு மானசீகமாக ஆதரவளிக்கத் தலைப்பட்டன. விக்கிலீக்ஸ் ஆதரவாளர்களின் போராட்டம் விரிவடையத் தொடங்கியது. ஆனாலும் அவர்கள் எந்தவித வன்முறையிலும் இறங்கவில்லை.

இனியும் சிறைப்பறவையாக யூலியனை அடைத்து வைத்திருந்தால், அது தனக்குச் சிக்கலாகிவிடுமென்று ஊகித்துக் கொண்ட பிரிட்டன், வழக்கை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்து, யூலியனை சுவீடனுக்கு அனுப்ப நாள் பார்க்கத் தொடங்கியது.

யூலியன் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டான். வழக்கு விசாரணைகள் நீதியாக நடைபெறுவது போன்று பிரிட்டன் காட்டிக் கொண்டது

2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி அவனுக்கு பிணையில் செல்வதற்கான அனுமதியை பிரிட்டன் நீதிமன்றம் வழங்கியது. ஆனால் சுவீடன் தரப்புசட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்யப் போவதாக உடனடியாக அறிவித்ததால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை மீண்டும் சிறையில் வைக்கப்பட்டான் யூலியன்.

இதன் மூலம் பிரிட்டன் "நாங்கள் யூலியனுக்கு எதிரானவர்கள் அல்லர். நாங்கள் பிணையில் விடுவித்தோம். ஆனால் சுவீடன் அதனை ஏற்காததாலேயே மீண்டும் சிறையில் அடைத்துள்ளோம்" என்று வெளிப்படுத்த முனைந்தது. பிரிட்டனின் இந்தத் தந்திரம் மிக நன்றாகவே வேலை செய்தது.



# 40 இருளின் கதவைத் திறந்தவன்

யூலியனை விடுவிக்கக்கோரும் போராட்டங்கள் பிரிட்டனில் ஓயத்தொடங்கின. இருந்த போதும் யூலியனின் ஆதரவாளர்கள் பிரிட்டனில் உள்ள சுவீடன் தூதரகத்தை முற்றுகையிட்டு, யூலியன் பிணையில் வெளிவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார்கள்.

மீண்டும் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டான் யூலியன். சிறைவாசம் அவனை மிகவும் வாட்டியிருந்தது. முகம் வழமையை விடச் சோர்வாக இருந்தது. அன்றைய தீர்ப்பு அவனுக்கு முக்கியமானது.

நீதிமன்றம் சுவீடனின் மேன்முறையீட்டை ஏற்று அவனை நாடு கடத்தும்படி உத்தரவிட்டால், எல்லாமே முடிந்து போய்விடும். அவ்வாறில்லாமல் பிணையில் விடுவித்தால் தப்புவதற்கான அடுத்த கட்டவழிகள் குறித்து ஏதேனும் ஆராயலாம். எனவே நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அவன் நெஞ்சம் பதைத்துக் கொண்டிருந்தது.

விசாரணைகள் முடிவுற்றிருந்தன. இருதரப்பு சட்டத்தரணிகளும் தங்களுடைய வாதங்களையும், நியாயங்களையும் முன்வைத்து தொண்டை காய்ந்து போனவர்களாக அமர்ந்து கொண்டார்கள். நீதிபதி தன் கண்ணாடியைச் சரிசெய்து, லேசாகச் செருமி விட்டு, அன்றைய உத்தரவுப்பத்திரத்தைக் கையில் எடுத்தார். காற்றில் காகிதமும், எதிர்பார்ப்பில் யூலியனின் மனமும் படபடத்துக் கொண்டன.

நீதிபதி வழங்கிய தீர்ப்பு என்ன? யூலியன் நாடுகடத்தப்பட்டானா?

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

# அறிமுகம் - காலவெளி




**முகவரி: ஆலடி,**
**பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.**

ஈழத்து இலக்கியப் பரப்பில் இன்னொரு புதிய சஞ்சிகை தன் வரவை நிகழ்த்தியிருக்கிறது. "காலவெளி" என்ற இந்தச் சஞ்சிகை பொலிகையூர் சு.க. சிந்துதாசன், ஆ.முல்லைதிவ்யன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்துள்ளது. கலை இலக்கியம் என்ற பிரதான அலகை பல்வேறு தளங்களிலும் ஓடவிடும் அவாவோடு காலவெளி சஞ்சிகை பிரசவிக்கப்பட்டுள்ளதாக அதன் ஆசிரியர் தலையங்கம் சொல்லி நிற்கிறது.

நீலா பாலன், இரா.ரமேஸ், ஆ.முல்லைதிவ்யன், மு.தனிகைச் செல்வன், பொலிகையூர் சு.க.சிந்துதாசன், வன்னியூர் செந்தூரன், த.அஜந்தகுமார் ஆகியோரின் கவிதைகளும், க.திலகநாதனின் சிறுவர் அரங்கு – பண்பும் பயனும் என்ற கட்டுரையும் க.அனுஷா, த.ஆனந்தமயில் ஆகியோரின் சிறுகதைகளும், கவிஞர் த.ஜெயசீலனின் நேர்காணலும் இந்த இதழை நிறைத்துள்ளன.

தரமான சஞ்சிகை ஒன்றுக்குரிய முனைப்புகளை காலவெளி நிறையவே கொண்டுள்ளது. எனினும் தளக்கோலத்திலும், படைப்புகளின் தேர்விலும் இன்னும் கவனம் செலுத்தினால் நன்று.

வழமையாகவே இலக்கிய தாகம் கொண்டவர்கள் படைப்புகளுக்கான இடைவெளியை நிரப்புவதற்காக தாமாகவே சஞ்சிகைகளை வெளியிடுவார்கள். ஆனாலும் படைப்புகளை பெறுவதில் உள்ள சிரமம், பொருளாதாரப் பலமின்மை, சந்தைப்படுத்தல் வாய்ப்பின்மை போன்ற பல காரணிகளால் இத்தகைய சிறு சஞ்சிகைகளுக்கு ஆயுட்காலம் மிகக் குறைவானதாகவே இருந்து வருகிறது. இந்தச் சாபக்கேட்டை காலவெளிக் குழுவினர் மாற்றி அமைப்பதற்கு முன்வரவேண்டும். அதற்காக காலவெளியின் தொடர்ச்சியான வருகையை உறுதி செய்வதற்காக கண்டகண்ட படைப்புக்களை எல்லாம் அள்ளி எடுத்து பக்கங்களை நிரப்பி ஒருவித மலட்டுத் தன்மையோடு இதழை வெளியிடவேண்டும் என்று அர்த்தமல்ல. அத்தகைய தன்மையோடு வருகின்ற இதழ்கள் இலக்கியப் பரப்பில் எந்தவித அதிர்வையே அல்லது புதிய பாய்ச்சலையோ நிகழ்த்துவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. வேண்டுமானால் எங்களுடைய இதழ் வருடக்கணக்காக வந்து கொண்டிருக்கிறது என்று [illegible] உதவலாம். அத்தகைய மலினமான போக்கிலிருந்து வித்தியாசமான தளத்துக்கு காலவெளி நகர்ந்து ஒரு பெரும் பாய்ச்சலை நிகழ்த்த வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களை அலைய வைத்தல்

பொதுவாகவே இந்தக் காதல் விடயத்தில் பெண்கள் எதுவுமே நடக்காதது போலவும் காதலே பிடிக்காதது போலவும் காட்டிக் கொள்வார்கள். ஆனால் ஆண்கள் அதற்கு நேர்மாறு. ஒரு பெண்ணின் மீது காதல் வந்து விட்டால் அவ்வளவுதான். நாய் மாதிரி வெக்க துக்கம் பாராமல் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு அலையத் தொடங்கிவிடுவார்கள். ஆண்கள் தங்கள் பின்னால் சுற்றுவதை விரும்பாதது போல காட்டிக் கொண்டாலும், உண்மையில் அதைப் பெண்கள் அதிகம் விரும்



பவே செய்கிறார்கள். அதுவும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் தங்களுக்காக நேரகாலம் பாராது ஒரு கூட்டமாக அலைவதை தங்கள் அழகுக்கான அங்கீகாரமாகவே கருதுகிறார்கள். காலம் மாறும் போது காட்சிகளும் மாறத்தானே செய்கின்றன. பேஸ்புக், செல்போன் என்பன ஆண்களின் அலைதலை அறைகளுக்குள் முடக்கிவிட்டன. அவர்கள் இப்போது இணையம் மூலமே தங்கள் காதல் வலைகளை இருந்த இடத்திலேயே நின்று கொண்டு வீசிவருகின்றனர். பாவம், பெண்கள். தங்களுக்கு பின்னால் அலைபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போவதால் நான் அழகற்றவளோ? என்ற எண்ணம் வரப்பெற்றவர்களாக அழாக்குறையோடு நடமாடுகின்றனர். அவ்வாறில்லாமல் மீண்டும் தங்களுக்குப் பின்னால் ஆண்களை 'லொங்கு லொங்'கென்று அலைய வைப்பதொன்றும் பெண்களுக்கு கஷ்டமான விடயமல்ல. அதற்கு சில வித்தைகள் பெண்களின் கைவசம் இருக்கவே செய்கின்றன.

எனவே கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்காக ஊரெல்லாம் அலைந்து திரியாமல் , தங்களிடம் ஒளிந்திருக்கும் வித்தைகளைப் பெண்கள் வெளிக்கொணர்ந்து, தமக்குப் பின்னால் ஊர்வலம் போல ஆண்களை அணிதிரளச் செய்யலாம். அதற்கு செய்யவேண்டியதெல்லாம் இவைதான் -

01 . ஆண்களைக் காணும்போது கடைக்கண் பார்வை பார்த்துவிட்டு, சுற்றுமுற்றும் பதற்றத்தோடு நோக்குவது போல பாசாங்கு பண்ணுங்கள். பின்னர் அந்த ஆணைப்பார்த்து ஒரு புன்னகை செய்தால் போதும். தனக்காகத்தான் நீங்கள் இப்படிக் கஷ்டப்பட்டு காதல் கணை எய்வதாக நினைத்துக் கொண்டு அன்று முதலே உங்களை ஆராதிக்க அந்த ஆண் தொடங்கிவிடுவான். இரவெல்லாம் தூக்கம் வராமல் தலையணைப் பிய்த்துக் கொண்டு எப்போது விடியுமென்று காத்துக் கிடந்து உங்கள் தரிசனத்துக்காக ஓடி வருவார்கள்.

02. ஆண்கள் அதிகம் இருக்கின்ற இடங்களில் அடிக்கடி நடமாடுங்கள். அங்கே இருக்கின்ற ஆண்கள் ஒவ்வொருவர் மீதும் மற்ற ஆண்கள் அறியா வண்ணம் ரகசியப் புன்னகையை அடிக்கடி வீசுங்கள். அவ்வப்போது அவர்களிடம் சில காதல் தோய்ந்த வார்த்தைகளையும் எடுத்துவிடத் தவறாதீர்கள். இப்படியே தொடர்ந்து செய்துவந்தால் கொஞ்சநாள்களில் ஒரு அடிமைக்கூட்டமே உங்கள் பின்னால் அணிதிரண்டு விடும் என்பதில் சந்தேகம் கிடையாது.

03 . அடிக்கடி ஸ்கூட்டியில் பயணம் செய்பவராக இருந்தால் இன்னும் சுலபம். ஆண்களின் அருகே சென்றதும் வேண்டுமென்றே உங்கள் ஸ்கூட்டியின் வேகத்தை தணித்து, பின்னால் திரும்பி கழுத்தை ஒரு வெட்டு வெட்டி, மின்னலாய் புன்னகையைத் தெரிக்க விடுங்கள். பின்னர் சற்று முன்னால் சென்று உங்கள் ஸ்கூட்டியின் பக்கக் கண்ணாடியில் பின்னால் வரும் ஆணைப்பார்த்து அதே பழைய புன்னகையைத் தொடருங்கள். அவ்வளவுதான் உங்களைப் பின்தொடர்வோர் அதிகமாகிவிடுவார்கள். அதே நேரம் விபத்துகளும் அதிகரிக்கும். உங்களுக்கு இன்னும் பொழுது போகும். பின்னே? விபத்துகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் மற்றவர்களுக்கு எப்போதாவது தான் கிடைக்கும். ஆனால் உங்களுக்கு அந்தப்பாக்கியம் அடிக்கடி கிடைக்குமே.

**(அடுத்த வாரமும் அலையவைப்போம்)**




# காதலா? காமமா?

**கொற்றவை**

**ஒரு சர்ச்சைத் தொடர்**

ஆண், பெண் உறவு பற்றிய கருத்தாடல்கள், கண்காணிப்புகள், கற்பு பற்றிய சிந்தனைகள் என்பன இயல்பான உணர்வுகளுக்கு எடுத்த எடுப்பிலேயே தடைபோட்டு விடுகின்றன. இதனால் இயற்கை வெளிப்பாடான ஈர்ப்பு உணர்வு, அதை ஆற்றுப்படுத்தும் உடல் மொழி வெளிப்பாடுகள் என்பன இறுதி இறுதி காதல் என்று உருவெடுத்து ஒரு புனிதத் தன்மைக்குள் பொய்மையாகச் சுருங்கிவிடுகின்றன. பெண்ணுக்கு இது கிட்டத்தட்ட பால்ய விவாகத்துக்கு நிகரான அடிமை விலங்காக அமைந்து விடுகிறது. ஆணுக்கு அது தன் ஆண்மை சார்ந்த சவாலாகிவிடுகிறது. தன் காதலை ஏற்க மறுக்கும் பெண்ணை அமிலம் ஊற்றி மிரட்டும் அளவுக்கு இந்த ஆண்மை உணர்வு ஆட்கொள்கிறது.

தமிழ்ப்பெண்கள் மத்தியில் இது வேறு விதமாகச் செயற்படுகிறது, சிறுவயதிலிருந்தே அவள் பெண்மையுடன் ஆணைச் சார்ந்திருக்குமாறே வளர்க்கப்படுவதால், காதல் கொள்ளும் பருவத்திலும் அவள் மனதளவில் மனைவி என்ற பாத்திரத்தையே கடைப்பிடிக்கத் தொடங்குகிறாள். அதனாலேயே தன் காதலன் மீது அதிக கட்டுப்பாடுகளை அவள் விதிக்க நினைக்கிறாள். சில சமயங்களில் தன் காதலன் தனக்குப் பொருத்தமற்றவன் என அவள் உணர்ந்து கொண்டாலும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு பயந்து அவனைப் பிரியமுடியாதிருக்கிறாள். இதேவேளை அவளைக் காதலிக்கும் ஆண் கணவனாக அவளை வெளியில் அழைத்துச் செல்வது, அவளுக்காகச் செலவு செய்வது என்று (அவ்வளவும் பெற்றோரின் பணத்தில் நடந்தாலும்) ஆண்மையைக் கட்டிக் காத்துக் கொள்கிறான். அப்படிச் செலவு செய்யக்கூடிய ஒருவனையே சில பெண்கள் நாடுவதென்பதும் சமூகத்தில் ஒரு உயர்வு நிலையில் வாழ்பவர்களுக்கு கிடைக்கும் மதிப்பின் விளைவே. தனக்கு கிடைத்திருக்கும் காதலன் பணம் படைத்தவன் என்று மார்தட்டிக்கொள்ளும் தற்பெருமை உணர்வு. அது தொடர்ச்சியாக நடக்கும்பொழுது அவனது அன்புக்கு ஈடாகத் தன் உடலை கொடுப்பது எனும் முடிவுக்குப் பெண் வந்துவிடுகிறாள். மேட்டுக்குடி பெண்ணாக இருப்பின் தற்காலத்திய குழப்பவாத முற்போக்கு சிந்தனைகள் அவள் உதவிக்கு வந்துவிடுகின்றன. சமூகத்தின் அழகு வரையறைகளினால் தாழ்வு மனப்பான்மையில் உழலும் ஆண் அழகான பெண்ணைக் கவர, தக்கவைத்துக்கொள்ள பணத்தைப் பயன்படுத்துவதையும் காணமுடி கிறது. சாதாரண உடல் ஈர்ப்பும் அதற்குத் தேவைப்படும் வழிகாட்டலும், மறுக்கப்படும் சுதந்திரமும் இரு உடல்களை இத்தகைய சிக்கல்களில் கொண்டுவந்து விடுகின்றன

**(தேடல் அடுத்த வாரமும்..)**

# காதலுக்கு நன்றி



சத்தமில்லாமல் காதலில் ஒரு சாதனை படைத்திருக்கிறது இலங்கை. ஆனாலும் அந்தக் காதல்சாதனை குறித்துப் பெரிதாக ஊடகங்களும் அலட்டிக் கொள்ளவில்லை. நீர்கொழும்பைச் சேர்ந்த நளினும், நிஷான்சலவும் காதலர்கள். இவர்கள் இருவரினதும் காதல் கைகூடி, 2013 நவம்பர் 8 ஆம் திகதி திருமண பந்தத்திலும் இணைந்து கொண்டார்கள். காதலர்கள் கைபிடிப்பது ஒரு சாதனையா? அது வழமையாக நடக்கும் ஒன்றுதானே? என்று சிலர் யோசிக்கலாம். ஆனால் தங்கள் திருமணத்தில் கின்னஸ் சாதனையை இவர்கள் செய்ய விரும்பினார்கள். தங்கள் காதல் பயிர் வளர உதவிய நிஷான்சலவின் நண்பிகளையெல்லாம் மணப்பெண்ணின் தோழியராகவும், நளினின் நண்பர்களை மணமகனின் தோழர்களாகவும் மணமேடையில் ஏற்றி நன்றி செலுத்தினார்கள். இதனால் 126 மணப்பெண்ணின் தோழியர்களுடனும் 25 மணமகனின் தோழர்களுடனும் இந்தத் திருமணம் பிரமாண்டமாக நடந்தேறியது. இதனால் மணப்பெண்ணின் தோழியராக அதிகமானோர் பங்கேற்ற திருமணமாக இந்தக் காதல் கல்யாணம் கின்னஸிலும் இடம்பிடித்துவிட்டது. இதற்கு முன்னர் தாய்லாந்தில் நடைபெற்ற திருமணம் ஒன்றில் மணப்பெண்ணின் தோழியராக 95 பேர் பங்கேற்றதே கின்னஸ் சாதனையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்றவன்

**யமன்:** ஹா...ஹா..

**ராஜேந்:** பூபாலு அஞ்சாதே. பொறு பொறடா. இதோ என்னுடன் கொண்டு வந்த ஊசி மருந்துகளைச் செலுத்து கின்றேன். அவை துரிதமாகப் பதிலளிக்கும். இந் தா, இந்த மாத்திரைகளையும் உட் கொள்.

**பூபாலு:** ஆ....மெல்ல...மெல்ல..

(சிறிது நேர அமைதி. பொருத்தமான பின்னணி இசையின் பின்.)

**யமன்:** ஆ!.. என்ன? அதிசயமாக இருக்கின்றதே. நான் செலுத்திய - அனுப் பிய வலிமை மிக்க கசக்கிருமிகள் எல்லாம் வலிமை இழந்து திரும்புகின்றனவே.

**ராஜேந்:** யம மகாராசாவே! தாங்கள் எங்களுடன் கோபிக்கக் கூடாது. நான் பூபாலுவை கச நோயிலிருந்தான் காப்பாற்று கின்றேனே ஒழிய, சாவிலிருந்து அல்ல.

**சித்திர:** இது என்ன? (தனக்குள்) ஒரே சங்கடமாக இருக்கின்றதே..எக்கச் சக்கமான கேசாக இருக்கின்றதே. (ஏட்டை அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்து) இன்னும்இரண்டே மாதங்கள்பூபாலுவின் உயிர்இங்குவந்துசேரவேண்டிக்கிடக்குது.. டொக்கடரும் எக்கச் சக்கமாக "பயிற்" (சண்டை) பண்ணுகிறார்.. எதிர்த்து நிற்கின்றார். இது எங்கை போய் முடியுமோ?... ஆ.. (ஏட் டைப் புரட்டி) இங்கை ஏட்டிலை இருக் குது.. இருக்குதே இன்னும் ரெண்டே ரெண்டு மாதங்கள். ஆள் இங்கை எப்படியும் வரவேண்டும். மிஸ்டர் பூபாலு. உங்கள் தந்தையின் பெயர்..

**பூபாலு:** அவர்குடும்பி வைச்சிருந் தவர். ஊர்ப் பொடியள் 'பொத்தி' எண்டுதான் அப்பு வைச் சொல்லுறது. அவற்றை பதிவுப் பேர் முத்துச்சாமி.

**பூபாலு:** ஓ..ஓ

**சித்திர:** முட்டாள்..

**பூபாலு:** யார் நானோ?

**சித்திர:** இல்லை...இல்லை நீ மூனாப் பூபாலு. அந்தக் கிங்கிரர்கள் தான் முட்டாள் பயலுகள்.. மகராசா! மகராசா!! ஒரு சின்ன "மிஸ் டேக்" நடந்து போச்சுது. தவறு ஏற்பட்டு விட்டது. பூலோகத்திலே கதிரேசு பூபாலுதான் இன் னும்




இரண்டுமாதங்களில் இங்கு வந்து சேர வேண் டும். இவர் மிஸ்டர்முத்துஸ்வாமி பூபாலு.

**பூபாலு:** ஓம் ஐயா..மூனா பூபாலு.

**சித்திர:** இவங்கள் மாறி விளையாடி விட்டாங்கள். இதாலைதான் சொல்லுறது படிச்ச கிங்கிரர்களை வேலைக்கு வைச்சி ருக்கவேணுமென்று

**யமன்:** என்ன இவன் தவறுதலான ஆளா? அப்போ அந்த வரவேண்டிய கதி ரேசு பூபாலுவை இங்கு கொண்டு வந்து சேர்க்க வழி?

**சித்திர:** அவனை இங்கு கொண்டு வர வழி கசம்தான்..

**யமன்:** இது இயலக் கூடிய காரியமா?

**சித்திர:** முடியும் பிரபு. அவர்கள் கல்வி யறிவு அற்றவர்கள். போதிய வைத்திய வசதிகள் அற்றவர்கள். அவர்கட்கு இந் நோயைப்பற்றிய போதிய அறிவு இல்லா தவர்கள். ஆதலால் அவர்களை இக் காச நோயால் சாகடிப்பது சுலபம்

**யமன்:-** ஹஹ.ஹ. அப்படியா? உடனே இரண்டு கிங்கிரர்களைக் காசக் கிருமிகளு டன், கதிரேசு பூபாலிடம் அனு ப்பி வையுங்கள் டொக்டர் ராஜேந்திரன் பூலோகம் சென்று தனது பரப்புரையை வேலைகளை விரிவ படுத்து முன்னர், கதிரேசு பூபாலுவை இவ்விடம் கொண்டு வாருங்கள்..ஹ..ஹ

**சித்திர:** கட்டளை காவலனே.

**யமன்:** பூபாலு..நல்ல ஒரு அறிவாளி நண்பனை சிநேகிதமாய்க் கொண்டதால் உயிர் பிழைத்தாய். ராஜேந்திரா. பூலோ கம் சென்று உன் சேவைகளைத் தொடர நம் நல்லாசிகள்

**ராஜேந்:-** நன்றி தரமராஜா

**யமன்:** யாரங்கே ! பத்திரமாக இவர் களைக் கொண்டு சென்று பூமியிலே சேர் த்து விடுங்கள்.

**சித்திர:** ஒரு "பார்ட்டி" வைச்சு அனுப் புவமா?

**யமன்:-** ம்..உன் விருப்பப்படியே செய். காலத்தை வென்றவனை பாராட்டி அனு ப்பி வையுங்கள். அனுப்பி வையுங்கள்.

(அனைவரும் இணைந்து பாட்டு)

வாழுவீர்! வாழுவீர்!! வாழுவீர்!!!
மக்களெல்லாம் ஒன்று கூடி
மன மகிழ்ந்து நாளுமே
மாண்புமிகு ஒற்றுமையாய்
பாரினிலே வாழுவீர்.. வாழுவீர்..
வாழுவீர்..(திரை மூட பாத்திரங்கள் வெளி யேறல்)

டொட்டய்ங்..



(காலத்தை வென்றவன் நாடகத்தில் Dr. இராசேந்திரனாக நடித்த திரு.ந. இராம நாதன், பூசாரியாக நடித்த திருசுபஞ்சாட்சரம், முத்துச் சாமியாக நடித்த திரு.சி.சிவனேசன் ஆகியோர் 2013இல் கலாபூஷணம் விருது பெற்ற நிலையில்......)

## சொற்சிலம்பம் போட்டி இல. 608

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| ■ | 9 | | | | ■ | 10 | |
| 11 | | ■ | | ■ | 12 | | ■ |
| | ■ | 13 | ■ | 14 | | ■ | 15 |
| 16 | 17 | | 18 | | ■ | 19 | |
| ■ | 20 | | | ■ | 21 | | |
| 22 | | ■ | 23 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

**மேலிருந்து கீழ்**

1. எந்த நேரமும்.
2. பின்னுதல்.
3. பிரமிப்பு.
4. தேவலோகத்து ஆடலரசி.
5. காப்பிய நாயகி.
8. பரீட்சை.
11. யாகம்.
12. ஒட்டுவதற்கு அவசியமானது.
13. ஒருவகை மீன்.
14. ஒன்று .
15. எல்லையில் கட்டுவது.
17. ஒருவகைப் பாம்பு.
18. பாடல்.
19. திறல்.
21. ரக.

**இடமிருந்து வலம்**

1. பெருங்கடல்.
6. வாய்க்குக் கீழான பகுதி.
7. விதைவையின் நிலை "மை" இழந்துள்ளது.
8. அடர்த்தியாக மரங்கள் உள்ள இடம்.
9. ஒரு புல் இனம்.
10. வருந்து.
11. முருகனது ஆயுதம்.
12. வடக்கின் கற்பகதரு.
14. சத்தம்.
16. கணபதி.
19. தெரு.
20. வித்தை.
21. கைக்கு ஐந்து.
22. நாங்கள்.
23. வருடத்தில் முதலாவது மாதம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 608

சொற்சிலம்பம் போட்டி 608ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் மற்றும் மார்ச் 19ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 606 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. பாயாசம், 2. ரகம், 3. தம்பதி, 4. சம, 5. கரகம், 6. தின் , 8. கும், 10. வருமானம், 12. தாம், 13. புத்திரன், 14. படிவம், 16. தம், 17. அசதி, 18. மரபு, 19. நகர, 21. அது

**இடமிருந்து வலம்**

1. பாரதம், 4. சகதி, 7. பாகம், 8. குமரன், 9. சம்பவம், 11. திரு, 12. தாம்பு, 15. மாதம், 17. அடிமனம், 19. நதி, 20. சவரம், 21. அகர, 22. திம்பு . 23. விதுரன்

### போட்டி இல. 605 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — திருமதி .தி.புவனா, மட்டுவில் தெற்கு . சாவகச்சேரி.

**2ஆம் பரிசு** — எஸ் .பாலசுப்பிரமணியம், இல-176/37, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை.

**3ஆம் பரிசு** — மாஸ்மிதாத் கலீல், இல 66/17 E , வாரணவீதி, திஹாரிய, கலகெடிஹேன.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ஜே.இசற். அம்ஜடீன், இல;-42, வீட்டுத்திட்டம், எலபடகம.
(2) எஸ்.திருஞானலோசனி, இல;-11-5/1, சென்லோறன்ஸ்றோட், வெள்ளவத்தை , கொழும்பு-06.
(3) திருமதி.ரஞ்சினி ஜெயரத்தினம், 21,3/2"A" 1ஆவது சப்பல் லேன், வெள்ளவத்தை.
(4) திருமதி .ப. சிவகுமாரன், அரசடி ஒழுங்கை, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.
(5) M.N.F. றஷ்கா ஆஸ்மி, 276 A, மார்க்கட் றோட், சாய்ந்தமருது-07.
(6) வஸந்தா பாலேந்திரா, இல;- 21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு-06.
(7) எஸ்.செல்வநாயகம், குமரன் வீதி, கலுவாஞ்சிக்குடி.
(8) வ. இந்துமதி, டச்சு வீதி, சித்தன்கேணி.
(9) அ.கலீஸ்ரா, இல;-15, நாவலர் வீதி, நாவாந்துறை,யாழ்ப்பாணம்.
(10) வி.செல்வநாயகம், சிவன் கோவில் வீதி, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உறுப்புக்கள் பற்றி அறிந்து கொள்வோம்

01. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
உதடு.
02. மனிதத் தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?
22 .
03. சிரிக்கவும், உம்மென்றிருக்கவும் எத்தனை தசைகள் அவசியமாகின்றன?
சிரிக்க 17 தசைகள்
உம் 43 தசைகள்
04. மனிதனை அடையாளம் காண கைரேகை பயன்படுகிறது அதுபோல மாட்டை அடையாளம் காணப் பயன்படுவது எது?
மூக்கு ரேகை.
05. இதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன?
4.
06. மனிதனுடைய காதுகளால் எத்தனை டெசிபல் அளவு பொறுத்துக்கொள்ள முடியும்?
130
07. உடலில் இரத்தம் பாயாத பகுதி எது ?
கருவிழி
08. மனிதன் உயிரிழந்த பின்பும் அவனது உடற்பாகங்கள் உயிர் வாழும் நேரம்:
கண் - 31 நிமிடம்
மூளை - 10 நிமிடம்
கால் - 4 மணித்தியாலம்
தசை - 5 நாள்கள்
இதயம் - சில விநாடிகள்
09. மனித உடலில் எத்தனை சதவிகிதம் நீர் உள்ளது?
70%
10. மனித மூளையில் நினைவாற்றலுக்காக எத்தனை செல்கள் உள் ளன?
பத்தாயிரம் கோடி.

# நாடுகளும் நாணயங்களும்

| | | | |
|---|---|---|---|
| ■இந்தியா | - ரூபாய் | ■இத்தாலி | - லிரா |
| ■இங்கிலாந்து | - பவுண்ட் | ■ஜப்பான் | - யென் |
| ■ரஷ்யா | - பிராங் | ■துருக்கி | - லிரா |
| ■அமெரிக்கா | - டொலர் | ■ஆஸ்திரியா | - ஷில்லிங் |
| ■சீனா | - யுவன் | ■பெல்ஜியம் | - பெல்கா |
| ■ஜெர்மனி | - ரிஷ்மார்க் | ■டென்மார்க் | - கிரவுன் |
| ■பாகிஸ்தான் | - ரூபாய் | ■கிரீஸ் | - டிரிக்மா |
| ■ஸ்ரீலங்கா | - ரூபாய் | ■ஹங்கேரி | - பெஸ்கோ |
| ■பர்மா | - கியாடா | ■மெக்சிகோ | - பெலோ |
| ■மலேசியா | - ரிங்கிட் | ■ஸ்வீடன் | - குரோனர் |

# விடுகதைகளும் விடைகளும்

01. மணம் இல்லாத மல்லிகை. மாலையில் மலரும். அது என்ன?
-தீபம்
02. அந்திவரும் நேரம். அவளும் வரும் நேரம். அது என்ன?
-நிலா
03. மண்ணுக்குள் இருக்கும், மங்கைக்கு அழகு தரும் அது என்ன?
-மஞ்சள்
04. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை. அது என்ன?
-இதயம்
05. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை. அது என்ன?
-தக்காளி
06. ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடிவரும் பந்தும் அல்லஅது என்ன
-கடல்

சிறுவர் மர்மத் தொடர்




ஆனால் அவளது கலவரம் தேவையற்றது என்பதை அடுத்து நிகழ்ந்த சம்பவங்கள் உணர்த்தின. கையில் தோன்றிய மந்திரவாளுடன் இந்திரவர்மனையும் சந்திரவர்மனையும் மண்டியிட்டு வணங்கியது அந்தச் சிலை. பின்னர் பெருங்குரலில் அந்தசிலை பேசத் தொடங்கியது.

"நந்திபுரத்து இளவரசர்களே! எனது பெயர் நாகசிம்மன். மந்திர தந்திரங்களில் கைதேர்ந்தவன். மாயத்தீவில் வசிக்கும் மந்திரக்கிழவியின் குரு நான் தான். ஆயினும் என்னிடமிருந்து மந்திரங்களைக் கற்றபின் அவளுக்குப் பேராசை வந்துவிட்டது. தனக்கு எதிரியாக நான் வந்து விடுவேனா என்ற என்ற எண்ணத்தில் என்னையும் சிலையாக்கி விட்டாள். அவளைப்பழி வாங்குவதற்குத் தகுந்த தருணத்தை எதிர்நோக்கியிருந்தேன். இன்று அது உங்களால் சாத்தியமாகப் போகிறது. இளவரசர்களே இந்த வாளைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதற்கு மட்டும் தான் மந்திரக்கிழவியின் உயிரைப்பறிக்கும் சக்தி உள்ளது" என்று கூறியவாறு இளவரசர்கள் முன் வாளை நீட்டினான். நாகசிம்மன். ஒரு கணம் யோசித்த இந்திரவர்மன் தயங்கினான். "நாங்கள் இருவரும் வயதில் சிறியவர்கள். எங்களால் மந்திரக்கிழவியை ஒழிக்க முடியுமா?" என்று நரசிம்மனை அவன் வினவினான்.

"நிச்சயமாக முடியும். இது வரையிலும் மந்திரத்தீவில் நுழைந்த எவரும் அவளுக்கு இவ்வளவு தொல்லை கொடுத்ததில்லை. முதன்முறையாக நீங்கள்தான் அவளைச் சிரமப்பட வைத்துள்ளீர்கள். அத்துடன் உங்களுக்குத் தெய்வீக சக்தி துணையிருக்கும்" என்று அவர்களுக்கு நம்பிக்கை அளித்தான் நரசிம்மன். அவனது வார்த்தைகளில் தென்பட்ட உறுதி இளவரசர்களுக்கு நம்பிக்கை ஊட்டியது. இருவரும் நாகசிம்மனை வணங்கி வாளைப் பெற்றுக் கொண்டனர். அந்தச் சமயத்தில் பேரோசையோடு சுரங்கம் முழுவதும் அதிரத் தொடங்கியது.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*




# கொடுத்துப் பெறுதல்

ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். புத்த மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கியது. தற்போது மதிப்புக் குறைந்து கொண்டிருந்தது. மடத்தின் உள்ளேயே பிக்குகள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயற் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒரு நாள்மடாலயத் தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார். குருவும் சற்று நேரத்திற்குப் பின் "உங்கள் மடத்தில் புத்தரே வந்து பிக்கு ரூபத்தில் தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவில்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி அது சிறப்பாக இயங்க முடியும்"? என்று கேட்டார்.

இதைக் கேட்ட தலைவர் மடத்திற்குத் திரும்பி அங்கே இருந்த புத்த பிக்குகளுக்கு சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை! கூடிச் செயற்படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

குட்டிக் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியைக் கொன்றது

இலங்கையில் கடந்த வாரம் (05.02.2014) தற்கொலை செய்துகொண்ட சிறுமி வெனுஷா இமந்தி உண்மையில் பேஸ்புக்கின் காரணமாகத்தான் தற்கொலை செய்து கொண்டாளா? என்பதை அவளின் கடிதம் விளக்கியுள்ளது. உண்மையில் என்ன நடந்ததென்பதை அவளது கடிதத்தை வாசித்து நீங்களே தீர்மானியுங்கள்.

10 ஆம் வகுப்பில் கல்வி கற்றுவந்த வெனுஷா இமந்தியின் பேஸ்புக் கணக்கில், அவரது நண்பனாக இணைந்துகொண்ட ஒருவன், தானும் அவளும் இணைந்து எடுத்த புகைப்படத்தை பதிவிட்டிருந்தான். அதனை வெனுஷாவின் பாடசாலை ஆசிரியை ஒருவர் கண்டு, அதிபரிடம் போய் முறையிடுகிறார். அதிபர், 5000 மாணவர்கள், ஆசிரியர்கள் முன்னிலையில் அந்தச் சிறுமியை மேடைக்கு அழைத்து 'வேசி' எனத் திட்டு கிறார். மறுதினம் பெற்றோரை பாடசாலைக்கு அழைத்துவரும்படி கட்டளையிடுகிறார்.

தான் செய்யாத ஒரு தவறுக்காக அவப் பெயர் கேட்க நேர்ந்ததையிட்டு பெரும் மன உளைச் சலுக்குள்ளான சிறுமி, தனது தந்தைக்கு 3 பக்கங்களில் ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, தாயின் சேலையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள்.

கீழேயுள்ளதுதான் சிறுமி தற்கொலை செய்துகொள்ள முன்பு எழுதி வைத்த கடிதம் – மரண வாக்குமூலம்.



அப்பாவுடன் வெனுஷா

எம்.ரிஷான் ஷெரீப்

*2014 -02-05*

*அப்பாவுக்கு,*

*இப்படி ஒரு முடிவெடுத்ததற்காக என்னை மன்னியுங்கள். நான் குற்றமெதுவும் செய்யாமல் எனது அப்பாவை, அதிபர் முன் நிற்க வைக்க என்னால் முடியாது. தவறு என்று நான் செய்ததென்றால் 7 ஆம் ஆண்டில் ஃபோட்டோ எடுத்ததுதான். நான் செய்த அந்தத் தவறை மட்டும் ஏற்றுக் கொள்கிறேன். ஃபோட்டோ ஒன்றை FB யில் இட்டவரையும், அந்த ஃபோட்டோவை எனக்கு 'டேக்' செய்தவரையும் விட்டுவிட்டு ஏன் என்னை நோக்கியே விரலை நீட்டுகிறார்கள்? இன்று நான் என்னுடைய ஒன்றுமறியாத அப்பாவை பாடசாலைக்குக் கூட்டிச் சென்றிருந்தால் அதிபருடைய ஏச்சுப் பேச்சுக்களை எவ்வளவு கேட்டிருக்க வேண்டியிருந்திருக்கும்? என்னுடைய அப்பா அவ்வாறான ஏச்சுப் பேச்சுக்கு ஆளாகக் கூடாது. எவ்வளவு பிரச்சினைகளை அப்பா தலையில் வைத்திருக்கிறீர்கள் என இந்த வீட்டில் யாருக்குமே புரிவதில்லை. அதற்கிடையில் எங்கேயோ போகும் ஒன்றுக்காக எனது அப்பாவை அவமானப்படுத்த வேண்டிய தேவை எனக்கில்லை. இதற்கெல்லாம் காரணம் எமது அதிபர். அவர் எதுவுமே தெரியாமல் என்னை நோக்கி மாத்திரம் விரலை நீட்டுவது ஏன் என எனக்குத் தெரிய வில்லை. 5000 பிள்ளைகள் முன்பு, கூட்டத்தில் வைத்து மேடைக்கு அழைத்துத் திட்டினார். ஒரு பையனோடு படம் பார்க்கப் போனாய் எனச் சத்தமிட்டார். நான் போகவில்லை என்பதை எனது தங்கையும், அக்காவும் அறிவார்கள். இவ்வளவு அநீதிகளெல்லாம் நடந்து போதும் கூட, நான் மிகவும் பொறுமையாக இருந்தேன். இனிமேலும் என்னால் இயலாது.*

*எனது வகுப்பாசிரியர் பண்டார, வகுப்பைப் பொறுப்பேற்கும் அன்று எனது எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு ஆசிரியருக்கு உதவினேன். அப்படியெல்லாம் செய்த என் மீது வீண் பழி சுமத்துகிறார்கள். இந்தப் பாடசாலைக்காக பாடுபடுவதுதான் எனது மிகப் பெரும் தவறு. பாடசாலையில் ஏதேனும் போட்டிகள், விழாக்களின் போது நான் நடனமாடாமல் இருந்தால்தான் ஆச்சரியமாக இருக்கும். ஜய[illegible]த்ர ஆசிரியை, ரஞ்சனி ஆசிரியை ஆகியோருக்கு இது தெரியும். எனது அப்பாவுக்கும், பண்டார ஆசிரியருக்கும் இனியும் கவலைகள் தர என்னால் முடியாது. நான் இன்று செய்யப் போகும் காரியத்தால் ஏனைய பிள்ளைகளுக்கு இம் மாதிரியான கீழ்த்தரமான வேலைகள் நடக்காமலிருக்கும் என எனக்குத் தோன்றுகிறது.*

*சில ஆசிரியர்கள் பிரச்சினையொன்று வரும்போது எனது குடும்பத்தை இழுக்கிறார்கள். நான் இங்கு சொல்வது யார் குறித்து என்பது என் அப்பாவுக்குத் தெரியும். நான் இன்னும் உயிருடன் இருந்து, இந்தப் பாடசாலையில் 'வேசி' எனப் பேச்சுக் கேட்டுக் கேட்டு O/L பரீட்சையைக் கூட என்னால் ஒழுங்காக எழுத முடியாது. அப்பாவிப் பிள்ளைகள் சிறியதொரு தவறைச் செய்தால் அப் பிள்ளைகளை 'வேசி' எனக் கூப்பிடுவதை நிறுத்துங்கள். பிள்ளைகள் பற்றி முறைப்பாடுகள் வரும்போது யார் சரி, யார் தவறு என்பதைத் தேடிப் பாருங்கள். எல்லா அவப் பெயர்களையும் எனக்கும், என் தங்கைக்குமே கூறுகிறார்கள். எனது பாடசாலையில் 50% மானவர்களுக்கு ஆண் நண்பர்கள் இருக்கிறார்கள். அவையெல்லாம் அதிபருக்குத் தெரியாது. நாங்கள் சொல்வதும் இல்லை. அதனால்தான் எம்மையே குற்றம் சாட்டுகிறார்கள்.*

*நான் எனது அப்பாவை மிகவும் நேசிக்கிறேன். எவருடைய முன்பும் நின்று 'எனது மகள் செய்த தவறுகளுக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்' என அவர்*

# காதலே வெல்லும்

## (சிரிக்காமல் படியுங்கோ)

அநேகமாக அப்போது அவன் ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த கோமதியை உயிருக்குஉயிராகக் காதலித்தான். அவனுடைய காதலுக்கு வயது,படிப்பு, அழகு என எதுவுமே ஒரு தடையாக இருக்கவேயில்லை. அவனுடைய அமரக்காதலுக்கு முன்னால் அதெல்லாம் ஒரு பொருட்டாகவேயில்லை.

ரியூசன் விட்டு வெளியே வீடு திரும்பிக்கொண்டிருந்த ஒருநாளில் அவளிடம் தன் காதலைச் சொல்ல ஒற்றைகுல் கொப்பிப் பேப்பரில் "ஐ லவ் யூ" என்று ரெனோல்ட் பேனாவால் எழுதி பக்கத்தில் ஒருஇதயமும் அதற்குள் நுழைந்த அம்பும் வரைந்து காத்திருந்தான். அவள் பின்னாலேயே தயங்கித் தயங்கிச் சென்று அதனைக் கையில் திணித்துவிட்டு ஓடிவிட்டான்.

அடுத்த நாள் அவன் ரியூசனுக்கே போகவில்லை. பயம்தான். ஆனால் அதற்கடுத்த நாள் அம்மாவின் உதைக்கு பயந்து ரியூசன் போனான். கோமதி வந்திருந்தாள். அவனைப் பார்த்து புன்னகைத்தாள். தன் வாழ்நாளின் முதல் காதல் பார்வையை அன்றுதான் அவன் சந்தித்தான். ரியூசன் முடிந்து கோமதியும் ஒரு பேப்பரை அவனிடம் கொடுத்தாள். அதில் 'ஐ லவ் யூ' என்று எழுதப்பட்டிருந்தது.

அடுத்த நாள் இருவரும் தங்களுடைய நண்பர்களை அனுப்பிவிட்டு தனியாக ரியூசனுக்குப் பக்கத்துக் கோயிலில் சந்தித்துக்கொண்டனர். அவன் அவளுடைய கைகளைப் பற்றிக்கொண்டான்.

'நாங்கள் ரண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கலாமா?' என்றான் அவன். அவளும் சரி என்பதுபோல தலையை ஆட்டினாள். வெட்கினாள்

அவன் தன் காற்சட்டைப் பொக்கற்றுக்குள் கையை விட்டு ஒரு ரொபியை எடுத்தான். அவள் ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதை அவன் எடுத்து பொறுமையாக– லாவகமாக– இரண்டு பக்கமும் விரலைப் பிடித்து– பிரித்து– தன் அப்படியே தூக்கி தன் வாயில் போட்டு சப்பி சப்பி சாப்பிட ஆரம்பித்தான்.

கோமதி அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவன் சாப்பிட்டுக் கொண்டே இருந்தான். முழுதாக அந்த ரொபி கரையும் வரை காத்திருந்து முடிந்த பின் அவள் அருகில் வந்து அவளுடைய கன்னத்தில் முத்தமிட்டான். முத்தமிட்ட பின் அவளை பார்த்து புன்னகைத்தான். ஆனால் அவள் கோபமாக இருந்தாள். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் அடிப்பாளோ என்று பயந்து தன்னுடைய பையைத் தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தான்.

ஓடியவன் நேராகத் தன் நண்பன் வடிவேலுவிடம் சென்றான். "வடிவேலு! முத்தம் குடுத்தா குழந்தை பிறந்திடுமாடா?" என்று கேட்டான். வடிவேலு கனநேரம் யோசித்துவிட்டு "இல்லையடா." என்று சொன்னதும்தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

அடுத்த நாள் மீண்டும் கோயிலில் அவன் அவளுக்காக கையில் ஒரு ரொபியோடு ஆசையாகக் காத்திருந்தான். ஆனால் கோமதி வரவேயில்லை. ரியூசனுக்கும் வரவில்லை. கோமதியின் தோழியிடம் விசாரித்தான். 'சின்னப் பெடியளோட பழக்கம் வைச்சது என்ர பிழைதான்' என்று அவள் பள்ளியில் சொன்னதாகச் சொன்னாள்.

அவள் சொல்லிக்கொண்டிருக்க கொஞ்சமும் தாமதிக்காமல் கையிலிருந்த ரொபியை கோமதியின் தோழியிடம் நீட்டினான். அவள் புன்னகையோடு வாங்கிக்கொண்டாள். அதற்குபிறகு அவர்கள் சந்தோஷமாக இருந்தனர். அவன் அவளுக்கும் முத்தம் கொடுத்தான். இறுதியில் காதல் வென்றது.



அதிஷா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக்கா? அதிபரா?




மன்றாடுவதை நான் விரும்பவில்லை. என்னை பாடசாலையிலிருந்து விலக்கிவிடும்படி அதிபர் கூறவிருக்கிறார். நாங்கள் நல்லதை மாத்திரமே செய்தபோதும், போட்டிகளிலெல்லாம் வென்றபோதும் எமக்கு நற்பெயரெதுவும் தரவில்லை. ஆனால் தவறொன்று செய்தவிடத்து முழுப் பாடசாலைக்கும் கேட்கும் வண்ணம் சத்தமிடத்தான் அவருக்குத் தெரியும். பாடசாலைக்கே நான் ஒரு இழுக்கு என அவர் கூறுகிறார். இவ்வாறெல்லாம் ஏச்சுக் கேட்டுக் கேட்டு என்னால் பாடசாலைக்குப் போக முடியாது. சுமதே ஆசிரியரும் கூட நான் நடத்தை கெட்ட பிள்ளை எனக் கூறினார். நான் அப்பொழுதெல்லாம் கூட எனது O/L பரீட்சைப் பெறுபேறுகளின் மூலம் எனது நல்ல நடத்தையை அவர்களுக்குக் காட்டத் தீர்மானித்துக் காத்திருந்தேன். எனினும் இப்பொழுது அதிகம் தாமதமாகி விட்டது. இனிய செய்ய ஏதுமில்லை.

பண்டார ஆசிரியர், நடன ஆசிரியைகள் இருவர், பிரபா ஆசிரியை ஆகியோர் மாத்திரமே இந்தப் பாடசாலையில் எனது திறமைகளைப் பற்றிக் கூறிப் பாராட்டியவர்கள். பிரபா ஆசிரியையிடம் சென்று எனது பிரச்சினைகளைக் கூறி ஆறுதல் தேடியபோது, நான் நன்றாக பரீட்சையில் சித்தியெய்த வேண்டுமென எண்ணியிருந்தேன். ஆனால் என் கனவுகள் எல்லாம் அழிந்து போயின. என்னால் இப்பொழுது O/L பரீட்சை தவிர்த்து அடுத்த ஜென்மத்தில் எந்த இடம் கிடைக்குமெனக் கூட எண்ணிப் பார்க்க இயலவில்லை.

அப்பா, நீங்கள் என்னுடைய பேரில் இருக்கும் காணியை உங்கள் பெயருக்கு மாற்றிக் கொள்ளுங்கள். நானில்லாமல் போனால் உங்களைக் கவனித்துக் கொள்ள ஆளிருந்தால் அது ஆச்சரியம்தான். உங்களிடம் பணம் இருப்பதால்தான் உங்களுடன் இருப்பவர்களெல்லாம் கூட இருக்கிறார்கள். பணம் இல்லாமல் போன நாளில் உங்களுடன் யாரும் இருக்க மாட்டார்கள். அவ்வாறு நடக்க இடமளிக்கக் கூடாது. இறுதியான இந்தக் கணத்திலும் கூட எனக்குத் தென்படுவதெல்லாம் எனது அப்பாவின் கண்களிரண்டும் மாத்திரமே. எனக்கு உங்களை விட்டுப் போவது மிகுந்த கவலையைத் தருகிறது. முடியுமென்றால் தங்கையையும் அந்தப் பாடசாலையிலிருந்து நீக்கி விடுங்கள். அந்த அதிபர் இருக்கும்வரை தங்கைக்கும் பாரபட்சம் காட்டுவார்.

அம்மா, நான் உங்களையும் மிகவும் நேசிக்கிறேன். அம்மா என்னுடன் இன்று இன்னும் கதைக்காததற்குப் பரவாயில்லை. சந்தோஷமாக இருங்கள். என்னுடைய அக்காவைத்தான் இந்த இறுதி நேரத்திலும் பார்த்துக் கொள்ள முடியவில்லை. நீங்களும் இருக்கும் இடத்தில் சந்தோஷமாக இருங்கள். என்னுடைய அப்பாவை கவனித்துக் கொள்ளுங்கள்.

நானில்லாமல் போனால் உங்களுடைய பிரச்சினைகளை யாரிடம் கூறுவீர்கள் அப்பா? எழுத எழுத எனக்கு எனது இதயத்தில் கவலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அடுத்த ஜென்மத்திலும் கூட ஆறுதல் கிடைக்காமல் போகும்.

என்னைப் போல தவறிழைக்காத பிள்ளைகள் இன்னும் இருப்பார்கள். அவர்களையும் பாடசாலையிலிருந்து விலக்கி விடப் பார்ப்பார்கள். அவர்களுக்காகவே நான் இந்த் தீர்மானத்தை எடுத்தேன்.

I love my family

நான் எனது குடும்பத்தை நேசிக்கிறேன்.

இங்கு என்னைப் பார்த்தவுடன், பண்டார ஆசிரியருக்கு முதலில் தெரிவியுங்கள். இதுதான் அவள் கடிதம்.

தற்காலத்தில் வயதில் பெரியவர்கள் பலர் சமூக மாற்றங்களை ஏற்றுக் கொள்ளவோ, கற்றுக் கொள்ளவோ மறுக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் முகப்புப் புத்தகம் உட்பட சமூக வலைத்தளங்கள் எல்லாமே தீயவை, வழிகெடுப்பவை மாத்திரமே. எனவே அவற்றைப் பாவிப்பவர்களும் கூட மோசமானவர்கள் என்பதுதான் அவர்களின் எண்ணமாக இருக்கிறது.

உண்மையில் அவளது தற்கொலைக்கு யார் காரணம்? என்னைக் கேட்டால் 'அதிபர்' என்றுதான் சொல்வேன். இந்த விடயத்தைப் பொறுத்தவரையில் பல வருடங்கள் சேவையாற்றியவரும், இராணுவப் பயிற்சி பெற்றவருமான ஒரு பொறுப்புள்ள அதிபர் எதையெல்லாம் செய்யக் கூடாதோ அதைத்தான் செய்திருக்கிறார்.

- உண்மையில் என்ன நடந்தது என சிறுமியிடம் விசாரிக்கவில்லை.
- எந்தப் பெண்ணையும் குற்றம் சாட்டக் கூடாத ஒரு பட்டப் பெயரை பகிரங்கமாகக் கூறி, அவள் மீது முத்திரை குத்தியமை.
- 5000 பேர் முன்னிலையில் அவமானப்படுத்தியமை.

  பதின்ம வயது என்பது எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடிய வயது என்பது குறித்து கவனமெடுக்காமை.

சிறுமியின் கடிதத்தில் அவள் குறிப்பிட்டிருக்கிறாள்.

'எனக்கு நேர்ந்தது, இனி எனது பாடசாலையில் எந்த மாணவிக்கும் நிகழக் கூடாது' – என்று இனி நேராது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. எனினும் இப்பொழுது அந்த அதிபரை என்ன செய்யலாம்? அதிபரை அந்தப் பாடசாலையை விட்டு விலக்கி விட வேண்டும் என்பதுவும், சிறுமியின் மேற்படி கடிதத்தை அவளது மரண வாக்குமூலமாகக் கொண்டு, தற்கொலைக்குத் தூண்டியதற்காக அதிபரைக் கைது செய்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுமே பொதுமக்களின் தீர்ப்பாக இருக்கிறது. ஆனால் ஏற்கனவே இலங்கையில் ஃபேஸ்புக் எனப்படும் சமூக வலைத்தளத்தைத் தடை செய்ய வேண்டுமெனக் கூறி வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்களுக்கு இம் மரணம் ஒரு ஆதாயமாக அமைந்துவிட்டது. எனவே அரச தரப்பு அமைச்சர்கள் சிலரும், இலங்கைக் காவல்துறையும் அதிபரின் சார்பாக இருப்பதனால் அதிபர் இன்று [illegible] விசாரணைகளுக்குக் கூட ஆளாகாமல் தனது பதவியில் தொடர்ந்தும் இயங்கி வருகிறார். அரசை எதிர்க்கப் பயந்து சிறுவர் அமைப்புக்களும், பெண்ணிய ஆதரவாளர்களும் கூட மௌனமாக இருப்பதனால் பொதுமக்கள் கொந்தளித்து அதிபருக்கு ஏதும் தீங்கிழைத்து விடக் கூடாதென்று, காவல்துறையினர் அதிபருக்கு தினமும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் இன்னும் சொற்ப நாட்களில் பொருட்களின் விலையேற்றத் தகவல்களினாலும், மாகாண சபைத் தேர்தல் செய்திகளாலும் மறக்கடிக்கப்பட்டு விடக் கூடும். ஆனால் பேரிழப்பென்பது, பாதிக்கப்பட்ட அப்பாவிப் பெற்றோருக்கும், சகோதரிகளுக்கும் மாத்திரமே.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

பாலாவின் தலையீடு பிரபாகரனை கட்டிப் போட்டது. இதனால் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசியலையும் போர்த் தந்திரோபாயத்தையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டால், சிறீ எம் மட்டில் மிகவும் கருணையுடனேயே நடந்து கொண்டார். ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஒரு முறை பாலாவுக்கு நெருப்புக் காய்ச்சலும் வயிற்றோட்டமும்ஏற்பட்டு கடும் சுகவீனமுற்றார். பாலாவால் எழுந்து நடக்க முடியவில்லை. சிறீ அவரைத் தூக்கிச் சென்று வண்டியில் ஏற்றினார். பின்னர் வண்டியில் இருந்து இறக்கி, மருத்துவமனையில் மருத்துவரின் அறைக்கும் தாமேதூக்கி கொண்டு போனார். துரதிர்ஷ்ட வசமாக ஆளுமை ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சிக்கலான முரண்பாடுகள் உருவானதால், ஒரு நெருக்கமான உறவு எம்மி டையே வளரவில்லை. ஆனால், அதேவேளை தனிப்பட்ட குரோதமும் இருக்கவில்லை. ஆகவே தான் பின்னர் பாலாவுடன் அரசியல் சந்திப்பு ஒன்றுக்காக சென்னையில் உள்ள விடுதலைப் புலிகளின் பணிமனைக்கு 1985 இச் சிறீ வந்தபோது அவரைச் சந்திப்பதில் மகிழ்ச்சியாக இருந்தது. பின்னர், விடுதலைப் புலிகளுக்கும் ரெலோவுக்கும் இடையே கொடூரமான மோதல் வெடித்து ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் சிறீ கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிப் போராளிகள் என்று கூறக் கூடிய இளைஞர்களின் எண்ணிக்கை 1981 இலே மிகக் குறைவே. ஆனாலும் அந்தச் சிறிய தொகையினரிடையேகூட, வழிநடத்தல், ஒன்று படுத்தல், ஒழுக்கத்தை வலியுறுத்தல் ஆகியவற்றால், தமது தலைமைச் சிறப்பை பிரபாகரன் நன்கு வெளிப்படுத்தினார். ஆண்டுக் கணக்கான அனுபவம் அப்போது இல்லாததாலும் நாம் ஒரு சிறிய குழுவாக இருந்ததாலும் எமக்கு நல்ல பெயரே நிலவியது. ஆகவே எவர் எவருக்கு என்ன என்ன பதவி, பொறுப்பு, கடமை என்று இருந்தாலும், ஒரு சமத்துவம், உண்மை யான உறவு, பாசம் ஆகியவை வளசரவாக்கத்தில் வசித்த எம்மிடை யே இழையோடி இருந்தது. பெரும்பாலான வீடுகளில் இருப்பது போல சமையல் அறையே நாம் கூடும் இடம். கூடி உண்ணும் போது நாம் பெற்ற மகிழ்ச்சியே தனியானது. பாலா, பண்டிதர், சங்கர், ரகு, பேபி, நேசன், நான் எல்லோரும் கூட்டுச் சமையலில் ஈடுபடும் போது ஒரே சிரிப்பும், பகிடியும் கும்மாளமுமாக இருக்கும். பாலா மீன் வெட்டிக் கொடுப்பார். அதன் பின் சமையலறை மூலையில் அரிசி மூடை மீது அமர்ந்தபடியே பகிடி விடுவார். போராளிகளின் வெடிச் சிரிப் பில் இருந்து பாலியல் ரீதியான பகிடிகள் என்று புரிந்து கொள்வேன்.



விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 23

(பதிவுதொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடாரம் நிறைதல்

ஆதி பார்த்தீபன்

சிறுகதை



'அழுகுணிப் பாப்பா'

இந்த உலகத்துல ஒரு மனுசனுக்கு எரிச்சல் தாற வார்த்தை எண்டு எனக்கு விளங்கும்

"என்ன நீ அழுகுணிப் பாப்பாவே அழுது கொண்டேயிருக்கிற உனக் கென்ன நடந்திச்சு"

"அது அது வந்து அம்மா அடிச்சுப் போட்டா"

''நீ என்ன குழப்படி செஞ்சனி அம்மா அடிக்கிற அளவுக்கு,"

''எனக்கிந்த முகாமில தாற பாணும் பருப்புக்கறியும் பிடிக்கேல,வேற சாப்பாடு வேணும் என்டதுக்கு..., எனக்குப் பருப்புக்கறி பிடிக்காது உறைக்குதுமில்ல ம்...ம்"

"இன்டைக்கு தானே பருப்புக் கறி. நாளைக்கு பாணும் சம்பலும் போடுவினம். மத்தியானம் கஞ்சியும் வரும்,"

''எனக்கு கஞ்சியும் வேணாம். அதுக்குள்ள அண்டைக்குத் தானே ஒரு ஆட்டுக்குட்டி விழுந்து செத்துப் போச்சாம்,"

"அது வேற கஞ்சி"

"ஆனா அந்த ஆட்டின்ட ஆவி என்ர வயித்துக்குள்ள பூந்திடுமே"

"சரி, அத விடு ஆதி"

''நீ எங்கட வீட்ட சாப்பிடுறியா?"

"இல்ல எனக்கு வேணாம்"

"ஏன் எங்கட வீட்டயெல்லாம் சாப்பிடக் கூடாதெண்டு அம்மா சொன்னவாவே அப்பிடியில்ல நான் சாப்பிடமாட்டன் வயிறு முட்டிட்டு,"

"சரி அப்ப அந்த சுறாமுட்டய சாப்பிடு நல்லா இருக்கும்"

இந்த சுறாமுட்ட என்டுறது எனக்கு புதுசு தான். பேசால முகாமில இருக்கேக்க சது அக்கான்ர வீட்ட சாப்பிட்டதுக்கு பிறகு இன்டைக்கு மட்டும் சாப்பிடேல, அவாக்கு என்ன விட மூண்டு வயசு கூட. எனக்கு அப்ப மூண்டு வயசு, வன்னியில இருந்து யாழ்ப்பாணம் வாறதுக்காக பேசலை முகாமில இருந்தம்

தனித் தனிக் கூடாரம் ,ஒரு சின்ன இடம்

- கீழ தறப்பாள் விரிச்சு போட்டிருப் பாங்கள் .சுத்திவர வேலி இருக்கும்,கருக்கு வேலி சில நேரம் குண்டு வெடிக்கும் தூரத்தில,

சில பேருக்கு பேயும் அடிச்சிருக்காம். எனக்குப் பயம், பேயடிச்சா கன்னமெல்லாம் வீங்கிப் போடுமாம்,சிதல் கூட்டுமாம்.

ஆறு மணிக்குள்ள சது அக்காவோட விளையாடிட்டு வந்திடோனும்,

அவாக்கொரு தம்பியும் இருக்கிறான். என்ர வயசு, நாங்க முகாமுக்கு வந்த காலத்தில இருந்தே அவன் சது அக்கா வீட்ட இல்ல.

அவன்ர தலைக்குக் கீழ பீஸ் பட்டிட்டாம் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போட்டீனமாம்,சது அக்காவும் அவான்ர அம்மம்மாவும் தான் இங்க இருக்கினம்,நான் பின்னேரத்தில சது அக்காவீட்ட போவன்,அங்க நாங்கள் மணலில வீடு கட்டுவம்.

அரண்மனை அகழி எல்லாம் கட்டுவம், சவுக்கு மரத்தின்ர இலையால பூந்தோட்டம் செய்வம்.செலைன் போத்திலும் இரண்டு வச்சிருக்கிறம், அதுல தண்ணி ஊத்தி விளையாடலாம்,கோட்ட கட்டுறதுக்கு அந்த தண்ணி கட்டாயமா வேணும்,செலைனின்ட சில்லு சுத்தினா தண்ணி வேகமாயோ மெதுவாயோ வரும் அதவச்சு மணல் குழைச்சு செய்யலாம்.

அத விட குங்குமத்த கரைச்சு லஞ்சீற்றில சுத்தி அக்கா எனக்கு முந்திரியப்பழம் செஞ்சு தருவா.

அடுத்த நாள் பேச்சின்ட தொடக்கம் அந்த முந்திரியப்பழத்தின்ட சுவைய பற்றினதாத்தான் இருக்கும்,நான் விளையாடப் போகாட்டியும் அக்கா கூடாரத்துக்கு வந்திடுவா."

"ஆதி நீ விளையாட வரமாட்டியே"

"இல்ல எனக்கு காய்ச்சல்,

''சரி எங்கட வீட்டில சுறாமுட்ட அவிச்சிருக்கிறம்,காய்ச்சல்காரங்கள் சாப்பிடக்கூடாதாம்,"

"இல்ல எனக்கு காய்ச்சல் மாறீட்டு"

ஒருக்கா கழுத்த தொட்டுப்பாத்திட்டு சொன்னன் "ம்...ம் மாறீட்டு"

"தொட்டுப்பார் காய்ச்சல் மாறீட்டு தானே"

''ஓம்... மாறீட்டு. சரி வா இண்டைக்கு நாங்க கோட்டைய கட்டிமுடிச்சிடோனும்,"

"சரி வாறன். சுறா முட்ட இருக்குத்தானே"

"இல்ல இண்டைக்கு நாங்கள் வேண்டேல,"

"நான் வரமாட்டன்"

''நீ பொய் சொல்லிட்ட தானே, நான் உன்னோட கோவம்'' விரல குறுக்கா வெட்டி கோபத்தின்ர அடையாளத்த காட்டினன்.

''அப்ப நீ வரமாட்டியா? நாளைக்கு அவிக்கச் சொல்லுறன் இண்டைக்கு வா,"

"இல்ல. நான் கோவக்கட்டியளோட பேசுறேல"

"ம் ... அப்ப போ. எங்கட தம்பி வந்துட்டான். நான் அவனோட விளையாடுவனே" எனக்குப் பொறாம வந்திட்டு

"இல்ல நீ பொய் சொல்லுற. காரொன்டும் வரேலயே நான் பாத்தனே"

"அவன் பின்னேரில வந்தான்"

"பொய். நீ பொய் பொய்யா சொல்லுற. சரி நான் வாறன். காட்டு பாப்பம் உன்ர தும்பிய,"

"சரி வா"

போனன் ஒருத்தருமில்ல

''புளுத்தாங்கோழி. பொய் சொல்லிட்ட ஒருத்தரும் வரேல"

''இல்ல பின்னேரம் வருவினம். அம்மம்மா சொன்னா,பிறகு நாங்க மூண்டு பேரும் சேர்ந்து விளையாடலாம்,"

"இல்ல நான் அவன் வந்தா வரமாட்டன். பிறகு இந்த கோட்டைக்கு அவன நீ அரசன் ஆக்கிடுவ. நான் படையாளாரா நிக்கோணுமெண்டுறது தானே உன்ர ஆச, எனக்கு அரசனா இருக்கத் தான் பிடிக்கும்,"

"பரவாயில்ல நீ அரசனாவே இரு. நாங்கள் உனக்குச் சேவை செய்யிறம்"

"ம்...ம் "கம்பீரமா அதிகாரத் தொனியோட அக்காவ பார்த்தன், இனி அவள் என்ர ஆணைக்கு கட்டுப்படுவாள். நான் ஒவ்வொரு நாளும் சுறாமுட்ட தரச் சொல்லி ஆணையிடுவன்.

நாங்கள் நாலு மணிக்கெல்லாம் கோட்டை கட்டி முடிச்சிட்டம். சது அக்கான்ர தம்பி வந்தவுடன கோட்டைய திறந்திடலாம்,

தூரத்தில முகாமின்ட கருக்கு வேலிய தாண்டி ஒரு கார் வருது.

அது அவன் தான் வந்திட்டான்.

காருக்கு மேல ஓரேஞ் கலரில ரங்குப்பெட்டி போல இருந்திச்சு, சது அக்கா தம்பிய பாக்கபோற சந்தோசத்தில நிண்டாள் "அம்மம்மா வெளில வாங்கோ வந்திட்டினம்"

"வந்திட்டினம் தம்பி வந்திட்டான்"

அம்மம்மா வெளியால வந்து சது அக்காவ அணைச்சுக்கொண்டு அழ வெளிக்கிட்டா

சது அக்காவும் என்ன அம்மம்மா என்ன அம்மம்மா எண்டு கேட்டு அழுறா"

பக்கத்து கூடார பொம்பிளையளும் வந்திட்டினம். எல்லாரும் ஒப்பாரி வைச்சு அழுகினம்

சது அக்கா சரியான அழுகுணிப் பாப்பா அவளும் அழுறாள். நான் தான் தனிய நிக்கிறன்

அக்கா அழுறா. நான் வீட்ட போக வெளிக்கிட்டன் தம்பி இனி வரமாட்டானாம். சாமிட்ட போய்ட்டானாம், காரும் வந்திட்டு பெட்டிய இறக்கிவெச்சிட்டினம்"

"எல்லாரும் அழுகுணிப்பாப்பா

நானும் தான்,

நான் ஏன் அழோணும்? தெரியேல. அழுக வந்திட்டு. எல்லா இடத்திலயும் அழுகைதான்

நான் அம்மாட்ட கேட்டன் "பீஸ் பட்டா செத்திடுவமா?"

நான் பாக்கேக்கயே எங்கட முகாமுக்கு அங்கால குண்டு வெடிக்குமே,

அம்மா குப்பறப்படுக்கச் சொல்லுவா,

காத மூடிட்டு குப்பறப்படுத்தா வலிக்காம சாகலாம் போல..

நான் சது அக்காட்ட போய் சொல்லோணும் இனி குண்டு வெடிக்கேக்க குப்பறப்படுக்கச் சொல்லி, சது அக்காவாவது எனக்கு வேணும்.

மூண்டு நாளில போய்ப்பார்த்தன்.

நாங்க கட்டின கோட்ட உடஞ்சு கிடந்தீச்சு. எல்லாற்ற காலும் மிதிச்சு.

சது அக்காவும் யாரும் அவங்க வீட்ட இல்ல எல்லாமே அமைதியா இருந்தீச்சு

''எனக்கு சொல்லாமலே போயிட்டா. அவாக்கு என்னில அன்பில்ல, மூண்டு நாளில கோட்டை யும் உடைஞ்சிடும். சது அக்காவும் காணாம போவா.


ஆனா சது அக்கா போல ஒரு அக்கா என்ர சாவுக்கு அழுறதுக்கிருந்தா நானும் ஒருக்கா செத்து போகலாம் எண்டு யோசிப்பன்,

எங்கட கோட்டை தான் அழிஞ்சு போச்சு ஆனா சது அக்கா கட்டித்தந்த ராச்சியம், ஆதின்ர ராச்சியம் அதுல சாவு எண்டதே இல்ல

**(ஆழமாய் நம்முள் கலந்த நினைவுகளுக்கு எப்பவும் மரணம் கிடையாது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விசித்திர நாய்

ஸ்கொட்லாந்தில் கிளாஸ்கோ நகரிலுள்ள நாய்களுக்கான டிரஸ் றீ-கோமிங் நிலையத்திலுள்ள இரு மூக்குகளைக் கொண்ட நாயை வளர்ப்புப் பிராணியாக வளர்க்க உலகமெங்குமிருந்தும் விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

அந்நாய் தொடர்பான வெளியான செய்திகளையடுத்து அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து குறித்த நாயை வாங்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அந்த நாயின் புதிய உரிமையாள ராக ஸ்கொட்லாந்திலுள்ள கிழக்கு லொதியன் பிராந்தியத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2 மூக்கு நாய் எதிர்வரும் வாரம் முதல் புதிய உரிமையாளரிடம் வளரவுள்ளது.

# பிரிட்டனின் ஆண்கள் பலாத்காரம்

உலகில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் தொந்தரவுகளும், பலாத்கார கொடுமைகளும் பரவலாக பேசப்பட்டாலும் பிரிட்டனில் ஆண்களை பலாத்காரம் செய்வது அதிகரித்துள்ளதாக அறிக்கை ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தில் ஆண்டுக்கு 72 ஆயிரம் சிறுவர்கள் மற்றும் ஆண்கள் பலாத்காரம் செய்யப்படுகின்றனர் என்ற அதிர்ச்சி தகவலை இங்கிலாந்து அரசு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வெளியான புள்ளிவிவரம் பற்றி பொலிசார் கூறுகையில், கடந்த செப்டம்பர் மாதம் வரை மட்டும் 13 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களில் மொத்தம் 2,164 ஆண்கள் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் பெரும்பாலும் இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்படும் ஆண்கள் புகார் தெரிவிப்பதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், பாதிக்கப்பட்ட ஆண்கள் தங்களுக்கு நேர்ந்த கசப்பான அனுபவத்திலிருந்து விடுப்பட்டு பிறரை போல் இயல்பான வாழ்க்கை வாழ்வதற்கான அறிவுரை, மனநல ஆலோசனைகளை வழங்க 5,00,000 யூரோக்கள் நிதியை இங்கிலாந்து அரசு ஒதுக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

# நீளமான கடலடி சுரங்கம்

உலகின் நீளமான சுரங்கத்தை கடலுக்கடியில் இரண்டு துறைமுக நகரங்களுக்கு இடையில் 36 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்க திட்டமிட்டுள்ளது சீனா. இந்த திட்டத்தில் ஷேன்டாங் மாகாணத்தில் உள்ள யான்டாய்யில் இருந்து லீபோனிங் மாகாணத்தில் உள்ள டைலான் நகரத்தை இணைக்கும் வகையில் சுமார் 123 கிலோமீற்றர் நீள சுரங்கப்பாதை அமைக்கபடுகிறது.

இந்த திட்டம் சீனாவின் 13ஆவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் (2016-2020) முடிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக சீனாவிலுள்ள கட்டுமான நிறுவனத்தில் சுரங்கம் மற்றும் ரயில்வே நிபுணராக உள்ள வாங் மெங்சூ கூறியுள்ளார்.

இந்த பிரம்மாண்ட திட்டத்திற்கான மாதிரி வரைபடம் வரும் ஏப்ரல் மாதம் மாநில கவுன்சிலில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே அதிவேக ரயில்களின் போக்குவரத்து கட்டமைப்பில் சீனா வேகமாக வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# 200 மில்லியன் பிரதிகள் விற்பனை




மைக்ரோசொப்ட் நிறுவனம் மெட்ரோ பயனர் இடைமுகத்துடன் அறிமுகப்படுத்தியிருந்த Windows 8 இயங்குதளமானது தற்போது 200 மில்லியன் பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

விண்டோஸ் 7 இயங்குதள விற்பனையை விடவும் மந்தமான வேகத்திலேயே விற்பனை இடம்பெற்ற போதிலும் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் 6 மாதங்களில் 100 மில்லியன் பிரதிகளையும், அதன் பின்னரான 6 மாதங்களில் 100 மில்லியன் பிரதிகளையும் விற்பனை செய்துள்ளது.

எனினும் விண்டோஸ் 7 இயங்குதளமானது ஒரு வருட காலப்பகுதியில் 240 மில்லியன் பிரதிகள் விற்பனையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போது எதிர்வரும் 2015ஆம் ஆண்டில் அறிமுகம் செய்வதற்காக விண்டோஸ் 9 இயங்குதள வடிவமைப்பில் மைக்ரோசொப்ட் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

# காருக்குள் புகைக்க கூடாது

பிரிட்டனில் சிகரெட் பிடிக்க பல்வேறு நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என சுகாதார ஆர்வலர்களும், சுற்றுச்சூழல் ஆதரவாளர்களும் பல்வேறு கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். அத்துடன் பொது இடங்களில் சிகரெட் பிடிக்க தடை விதிக்க வேண்டும் என எதிர்க்கட்சியினரும் கோரிக்கை எழுப்பி வருகின்றனர்.

இதனையடுத்து முதற்கட்டமாக அரசு சிகரெட்டுகள் பயன்படுத்துவதற்கு பல்வேறு தடைகளை விதித்துள்ளது. இதில் பெற்றோர் தங்களது குழந்தைகளை அழைத்து செல்லும்போது காருக்குள் புகைக்க கூடாது என தடை விதித்துள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்பாக இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அரசு மிக தீவிரமாக உள்ளது. ஆனால் தனிமனித சுதந்திரத்தில் அரசு தலையிடுவதாக உள்ளது என சில எம்.பிக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



# இரண்டு இயங்குதள கைபேசி



Geeksphone Revolution நிறுவனம ஸ்மார்ட் கைபேசி உலகில் முதன் முறை யாக இரண்டு இயங்குதளங்களைக் கொண்ட கைபேசியினை அறிமுகம் செய்கின்றது.

இக்கைபேசியில் கூகுளின் Android இயங்குதளம் மற்றும் Mozilla Firefox இயங்குதளம் ஆகியன நிறுவப்பட்டுள்ளன.

இதன் மூலம் விரும்பிய இயங்குதளத்தில் குறித்த கைபேசியினை இயக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

இதில் Dual Core Intel Atom Z560 1.6GHz Processor 1GB RAM மற்றும் 4GB சேமிப்பு நினைவகம் என்பன காணப்படுகின்றன.

மேலும் 4.7 அங்குல தொடுதிரையினை உடைய இந்தக் கைபேசியில் 8 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமெரா, 1.3 மெகாபிக்சல்களைக் கொண்ட வீடியோ அழைப்புக்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளது.

இந்த மாதம் 20ஆம் திகதி வெளியிடப்படவுள்ள இந்தக் கைபேசியின் பெறுமதியானது 289 யூரோக்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலே காட்டப்பட்டுள்ள SLT புறோட்பேண்ட் பக்கேஜ்களை பயன்படுத்தும் எமது தற்போதைய மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்காக ஜனவரி 01 முதல் மேலதிக GB பாவனை அளவு வழங்கப்படுகின்றது. கட்டணங்களில் எவ்வித மாற்றமும் இல்லை. SLT புறோட்பேண்ட் பக்கேஜ்களுடன் நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணையத்தை நீங்களும் அனுபவித்திட, இன்றே அருகிலுள்ள பிரதேச டெலிகொம் காரியாலயத்திற்கு அல்லது டெலிஷொப்பிற்கு வாருங்கள்.

பக்கேஜ் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் அல்லது www.slt.lk/broadband இணையத்தளத்திற்கு செல்லுங்கள்.

1212 ஐ அழையுங்கள்

www.slt.lk

**BROADBAND**







## அழகான தோற்றத்துடன் என்றும் உங்களை வெளிக்காட்டுங்கள்

இளமைப்பருவத்திலிருந்து வாழ்க்கையின் மாறுபட்ட பல நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கும் பெண்ணானவள் இவ்வனைத்து நிகழ்வுகளிலும் அழகாக இருப்பின் அது அவள் பெற்ற அதிஷ்டமாகும். என்றும் மறையாத அழகினை வாழ்நாள் முழுவதும் பெற்றுத்தரும் Facia உங்கள் அழகினை என்றும் பாதுகாக்கின்றது. Facia சருமச்சுருக்கம், சருமத்தில் நிற மாற்றம் ஏற்படுவதை தடுத்து சருமத்திற்கு பளபளப்பான பொலிவினை சேர்க்கின்றது. Facia தலைமுடி உதர்தலை தடுத்து தலைமுடிக்கு போஷணையை வழங்கி வலுமிக்க அழகான கூந்தலை உங்கள் உரிமையாக்குகின்றது.

Facia உங்களது நகங்களை அழகாக்கின்றது. Facia சருமம், தலைமுடி மற்றும் நகங்களின் அழகிற்கு தேவையான பிரதான போஷணை மூலக்கூறுகள் பலவற்றினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

Facia இல் அடங்கியுள்ள இயற்கை மூலக் கூறுகள் கடல் கொலஜின் (Marine Collagen)- உடலின் அனைத்து பாகங்களினதும் பராமரிப்பிற்கு தேவையாக பிரதான மூலக்கூறாக இதனை வகைப்படுத்த முடியும்.

திராட்சை விதை சாறு (Grape Seed Extract)- சருமச்சுருக்கம், தலைமுடி உதிர்தல் போன்றவற்றை தடுக்கின்றது.

பயோடின்- தலைமுடிக்கு சிறந்த பராமரிப்பினையும் சக்திமிக்க நகங்களையும் பெற்றுத்தரும். இதற்கு மேலதிகமாக பல இயற்கை மூலக் கூறுகள் உள்ளடங்கியுள்ளது. Facia அவுஸ்திரேலியாவின் CMPS தனியார் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலியாவின் TGA தரச் சான்று மற்றும் உலக சுகாதார அமைப் பின் தரச் சான்று (WHO - GMP) Facia உற்பத்திக்கு கிடைத்துள்ளது. இயற்கை மூலக்கூறுகளை மட்டுமே பயன்படுத்தி தயாரிக்கப்படும் உற்பத்தியான Facia இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இயற்கை உற்பத்தியாகும்.

TGA பதிவிலக்கம்: 67513










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 பெப்ரவரி 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.